பக்கங்கள் : பத்து

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 17 சனிக்கிழமை (03.11.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 337

## கிளிநொச்சியில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட

# விமானக் குண்டு வீச்சில் தமிழ்ச்செல்வன் மரணம்!

## 3 நாள்களுக்குத் துக்கதினம் அனுஷ்டிக்கப்படும்

கிளிநொச்சி, நவம்பர் 03

இலங்கைவிமானப் படையினரின் 'சுப்பசொனிக்' விமானங்கள் நேற்றுக்காலை 6 மணியளவில் கிளிநொச்சியில் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச் செல்வன் உட்பட ஆறு புலிகளின் உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளனர்.

லெப்டினன்ட் கேணல் அன்புமணி (அலெக்ஸ்), மேஜர் மிகுந்தன், கப்டன் நேதாஜி, லெப்டினன்ட் ஆட்சிவேல், லெப்டினன்ட் வாகைக்குமரன் ஆகியோரே பிரிகேடியர் தமிழ்ச்செல்வனோடு இத்தாக்குதலில் உயிரிழந்துள்ளார்கள் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை 4 மணி முதல் கிளிநொச்சி நகரப்பிரதேசத்தில் அரச விமானப்படைக்குச் சொந்தமான வேவு விமானம் ஒன்று வட்டமடித்து, வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாகவும் அதனையடுத்து, காலை 6 மணியளவில் கிளிநொச்சி 155 ஆம் கட்டைப் பகுதியில் குண்டு வீச்சு விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடத்தின எனவும் கிளிநொச்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(10ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப் புலிகளின் தலைவர் அஞ்சலி செலுத்தியபோது...

## 14 வருடங்களுக்கு முன்னரும் வான் தாக்குதலில் சிக்கியவர்

கிளிநொச்சி,நவ.03

பதின்நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பூநகரி இராணுவத் தளம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய 'தவ ளைப் பாய்சல்' தாக்குதல் நடவடிக்கையின்போது விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் இருந்து கடும்காயங்களுடன் தப்பிப் பிழைத்த தமிழ்ச்செல்வன் இப்போது விமா னக் குண்டு வீச்சில் உயிரிழந்திருக்கின்றார்.

பூநகரிச் சமரின்போது விமானத் தாக்குதலில் அவரது ஒரு கால் தொடையின் சதைப்பகுதி சிதறியது .இதனால் நீண்டகாலம் நடக்க முடியாமல் சிகிச்சை பெறவேண்டியவரானார். அதன் பின்னர் மெல்லிய சதையுடன் எலும்பு

(10ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் பொறுப்பாளராக நடேசன் நியமிக்கப்பட்டார்



கிளிநொச்சி, நவ. 03

விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் இடத்துக்கு புதிய அரசியல் பொறுப்பாளராக பா.நடேசனை புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நியமித்துள்ளார் என இணையத்தள செய்திகள் தெரிவித்தன.

இதுவரை புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளராகப் பணியாற்றிவந்தவர் பா.நடேசன் என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகள் தரப்பில் வீரமரணம் அடைந்த போராளிகளில் அதியுயர் படைத்தர நிலை பதவியான 'பிரிகேடியர்' பதவி நிலை தமிழ்ச்செல்வனுக்கே இப்போது வழங்கப்பட்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.(சி)

## தமிழ்ச்செல்வனுக்கு தமிழகத்தில் அஞ்சலி

வான்குண்டுத் தாக்குதலில் வீரச்சாவடைந்த புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வுகள் நேற்று பெரியார் திராவிடர் கழகம் சார்பில் தமிழ் நாட்டில் நடைபெற்றன.

சேலத்தில்

சேலம் போஸ் மைதானம் அருகில் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட போராளிகளுக்கான வீரவணக்க நிகழ்வும் அநுராதபுரம் வான்படைத் தளத்தை அழித்த சிறப்புக் கரும்புலி மாவீரர்களின் வித்துடல்களை நிர்வாணப்படுத்திய இலங்கை அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டமும் நேற்று மாலை 4 மணிக்கு நடத்தப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)


### விமானப்படைப் பேச்சாளர் சொல்கிறார்:

## புலிகளின் சர்வதேச தொடர்பாடல் நிலையம் நேற்று முற்றாக அழிக்கப்பட்டது

### அப்போதே தமிழ்ச்செல்வனும் ஐவரும் கொல்லப்பட்டனர்

கொழும்பு, நவ.3

விடுதலைப் புலிகளின் சர்வதேச தொடர்பாடல் நிலையம் நேற்று நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் முற்றாக அழிக்கப்பட்டது.



விமானப் படையின் பேச்சாளர் குறூப் கப்டன் அஜந்த சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

அநுராதபுரம் விமானப் படைத் தளத்தின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் பின்னர் நேற்றுவரை அவர்களின் இலக்குகள் மீது ஒன்பது தடவைகள் விமானப் படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.அனைத்துத் தாக்குதல்களும் குறித்த இலக்குகளை துல்லியமாகத் தாக்கியுள்ளன.

நேற்றைய தரக்குதலில் விடுதலைப் புலிகளின் செய்மதி வசதிகள் கொண்ட சர்வ

(10ஆம் பக்கம் பார்க்க)

## கருணா நேற்று லண்டனில் கைது!

லண்டன், நவம்பர் 03

இலங்கை அரசுப்படைகளுடன்இணைந்து துணைப் படைக் குழு ஒன்றை இயக்கியவரான கருணா (முரளிதரன்) நேற்று மத்திய லண்டனில் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார் என்று லண்டனில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(10ஆம் பக்கம் பார்க்க)

## இது புலிகளுக்கு விடுக்கப்பட்ட செய்தி என்கின்றார் கோத்தபாய

கொழும்பு, நவ.03

''புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்ட சம்பவம் படையினரின் நடவடிக்கையின் ஓர் ஆரம்பம். இது விடுதலைப் புலிகளின் தலைமைக்குக் கொடுக்கப்பட்ட ஒரு செய்தி.''

- இப்படி அறிவித்திருக்கின்றார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ. சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு இந்தச் சம்பவம் குறித்துக் கருத்து வெளியிட்டபோதே அவர் இப்படித் தெரிவித்தார்.



''புலிகளின் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் ஒவ்வொருவரும் எங்கு இருக்கின்றார்கள் என்பது எமக்கு நன்கு தெரியும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் மீதான குண்டுவீச்சு இராணுவரீதியான தாக்குதல் அல்ல

### ஏற்கமுடியாது என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, நவ. 03

''புழிவாங்கல் மூலம் எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியாது.

''விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் மீது நடத்தப்பட்ட தாக்குதல் இராணுவ ரீதியிலான தாக்குதல் என்று கருதமுடியாது''

-இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார்.

தமிழ்ச்செல்வன் விமானத் தாக்குதலில் உயிரிழந்தமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பவை

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடிகொளுத்தி தெற்கில் வரவேற்பு

கொழும்பு, நவ. 03

புலிகளின் அரசியல் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச் செல்வன் விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட செய்தி வெளியாகியதை காலி மற்றும் அநுராதபுரம் போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் வெடிகொளுத்தி, ஆரவாரம் செய்து வரவேற்றனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

சில இடங்களில் படையிரைப் பாராட்டும் பதாகைகளும் தொங்கவிடப்பட்டிருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

(சி)




**Invitation**

**56th Annual Festival of Carols**
**By**
**The Combined Choirs of Schools and Colleges of the North**
**at**
**The St.John's College Hall**
**on**
**Saturday 3rd November, 2007,**
**10.00 a.m.**

**All are cordially invited.**

(C/54201)

## அந்தியேட்டி அழைப்பு

### அமரர் சின்னக்குட்டி செல்வம்



கடந்த 04.10.2007 அன்று அமரத்துவமடைந்த எங்கள் குடும்பத் தாயார் அமரர் சின்னக்குட்டி செல்வம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03.11.2007) சனிக்கிழமை காலை 7 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளன.

இக்கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்மாசாந்தி பெறப் பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடி,
உடுப்பிட்டி. (67576)

செல்வநாதன்.
[கட்டி]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி தில்லையம்பலம் நல்லம்மா



தோற்றம் 26 . 03 . 1927

மறைவு 04 . 10 . 2007

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச்செய்தி அறிந்து, அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (03.11.2007) சனிக்கிழமை மல்லாவியில் உள்ள அவரது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

புதுவீதி,
காரைநகர். (சி/54217)

## கல்வியியற் கல்லூரியில் கல்விமாணிப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், நவ. 03

தேசிய கல்வி நிறுவனத்தின் கல்விமாணி மற்றும் பட்டபின் கல்வி டிப்ளோமா ஆகிய பாடநெறிகள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இன்று சனிக்கிழமை ஆரம்பமாக உள்ளன.

தேசிய ரீதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றத்திற்கு அமைய யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் மேற்படி பாடநெறிகள் ஆரம்பமாகின்றன.

2006/2007 கல்வியாண்டிற்கு கல்விமானி மற்றும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆகிய பயிற்சி நெறிகளுக்கு புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகள் வைபவ ரீதியாக இன்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பமாகின்றன.

(1)

## நாளை

குருநகர், நவ. 03

யாழ்.மறைமாவட்ட புனிதமரியாயின் சேனையின் மாதாந்த கொமிசியக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்து மணிக்கு யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறவுள்ளது.

* * *

குடத்தனை, நவ. 03

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறுக் கிழமை தோறும் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வில் நாளை ஞாயிற்றுக் கிழமை 'இராமாயணம்' தொடர் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இந்தச்சொற்பொழிவினை சொல்வேந்தன் பொன். சுகந்தன் நிகழ்த்தவுள்ளார்.

(78)

SALES SALES SALES

**தீபாவளி அதிரடி மலிவு விற்பனை**
**03.11.2007 தொடக்கம் 08.11.2007 வரை**

ORIGINAL SOFTWARE,
GAME CD - 75/=
ORIGINAL ACD
50/=முதல் 100/= வரை
ORIGINAL VCD MOVE - 75/=

ஏனைய அனைத்து வகையான DVD, VCD, MP3 இந்து, கிறிஸ்தவ பக்தி CDக்கள், கர்நாடக சங்கீத CDக்கள் என்பன விற்பனைக்கு உண்டு. இவை அனைத்துக்கும் 10 வீதம் முதல் 50 வீதம் வரை விலைக் கழிவு வழங்கப்படும். இச் சலுகை தீபாவளி தினம் வரை மட்டுமே.

**MUSIC WORLD**
141B, தபால்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி.

SALES SALES SALES

## விற்பனைக்கு

மிக நல்ல நிலையிலுள்ள (Cannon NP 1215) போட்டோ பிரதி இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 222, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 0773867790.

சகல விதமான போட்டோ பிரதி இயந்திரங்களுக்குமான ரோணர்வகைகள், உதிரிப் பாகங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

## தவறிவிட்டது

மானிப்பாய்கும் சுதுமலை வீதி, இணுவில், உரும்பிராய் போன்ற பகுதியில் பயணித்தபோது நவரட்ணம் விஜிதா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (756863207V), விசேட அடையாள அட்டை (0903010506) ஆகியன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'செல்வன் மஹால்', விதானையார் வீதி, உரும்பிராய் மேற்கு என்னும் முகவரியில், தொடர்பு (021-222-3990) கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## விற்பனைக்கு

போட்டோஸ்ரட் (SHARP)
புதிய, பழைய மெஸின்
விற்பனைக்குண்டு.

**ஸ்ரீ முருகன்**
303, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா தங்கம்மா



புத்தூர் கிழக்கு, புத்தூரை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா தங்கம்மா நேற்று (02.11.2007) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் பொன்னையாவின் அன்பு மனைவியும் வாமதேவி, சரோஜினிதேவி காலஞ்சென்றவர்களான வாமதேவன், ஞானேஸ்வரி மற்றும் பாலசுப்பிரமணியம், மோகனதாசன் (கமலக்கண்ணன் திருமணசேவை) ஆகியோரின் அன்புத் தாயும் இராஜரட்ணம் (தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை), விஜயகுமார் (அன்ரன் - நீர்வேலி றோ.க.த. பாடசாலை), ரஜிதா, பிரின்தாபன், ஸ்ரீவன்னன், மஜித்காந், சதுஷ்காந், சுகனி, கீர்த்தனா, துசியந்தி, ரவீந்தினி, முகுந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சோமிகாந், பகீனா, சாருகாந், அர்ஷயன், மதுசியாம், அபினயா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2007) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக புத்தூர் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர். (67586)

தகவல்
நா. விஜயகுமார்
(அன்ரன் - பேரன்)

### குமாரசாமி ஜெயலட்சுமி



காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது குளப்பிட்டிச்சந்தி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி ஜெயலட்சுமி நேற்று (02.11.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் குமாரசாமியின்(மயூரா அழகு மாடம்) அன்பு மனைவியும் மயூரன், கஸ்தூரி (HNDA 2ND YEAR) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற முருகேசு மற்றும் பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் அன்னலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.11.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ் செய் யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே. எஸ் வீதி,
குளப்பிட்டி, கொக்குவில்.

தகவல்:
குமாரசாமி (கணவர்).

### விசுவர் தம்பித்துரை



யாழ்ப்பாணம், பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும் 10/1, றக்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவர் தம்பித்துரை அவர்கள் நேற்று (02.11.2007) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவர்-தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-ராசம்மா தம்பதியினரின் மருமகனும் செல்லக்கண்டு, காலஞ்சென்றவர்களான பொன்னையா, மாசிலாமணி ஆகியோரின் சகோதரனும் தங்கமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மேரிகில்டா, கசில்டா, ராகினி (பிரான்ஸ்), கஜேந்திரன் (ரமேஷ் -I.C.R.C) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேந்திரராசா, ஸ்ரான்லி (பிரான்ஸ்), ஹிபாமா (ஆசிரியை, புனித சாள்ஸ் ம.வித்.) ஆகியயோரின் அன்பு மாமனும், பிரீதன், அஸ்வின் (பிரான்ஸ்), சுமாலிக்கா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), வருணியா (புனித ஜொண் பொஸ்கோ) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (03.11.2007) சனிக்கிழமை பி.ப 2.30 மணியளவில் புனித திரேசாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

10/1, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (67582)

தகவல்
கஜேந்திரன் (ரமேஷ் -மகன்)

### நடேசலிங்கம் பாஸ்கரன்



பத்துப்பனையடி, அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசலிங்கம் பாஸ்கரன் 01.11.2007 வியாழக்கிழமை அகால மரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் நடேசலிங்கம்-சறோஜினிதேவி தம்பதியரின் அன்பு மகனும் ரெங்கசாமி - மணிமாலா தம்பதியினரின் மருமகனும் சுவாசினியின் அன்புக்கணவரும் சச்சுதனின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.11.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

14/1, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (67588)

தகவல்,
R.ரெங்கசாமி (மாமன்)
(நியூ கமல் செராமிக்ஸ்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணைப் பிரதேச சபைப் பிரிவில் பயன்தரும் மரக்கன்றுகள் நடுவதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம், நவ.3

வேலணை பிரதேசசபைக்குட்பட்ட தீவகப் பகுதியில் இந்த ஆண்டு பயன் தரும் மரக்கன்றுகள் நடுவதற்கு திட்டமி டப்பட்டுள்ளது.

அதன் பொருட்டு பிரதேச அபிவிருத் திக்கான பயன்தரும் மரக்கன்றுகளை வழங்கி உதவு மாறு வேலணைப் பிரதேச சபை செயலா ளர் கை.மகேந்திரலிங்கம் மானிப்பாயில் உள்ள பசுமைப் புரட்சியாளர் வை.செக ராஜசிங்கத்தைக் கடிதம் மூலம் கோரியுள் ளார்.

எதிர்வரும் ஏழாம் திகதி வேலணை பிர தேசசபை தலைமை அலுவலகத் திறப்பு விழா இடம்பெறவுள்ளது.

அன்றைய தினமே மா,பலா, நாவல், கமுகு, வேம்பு போன்ற மரங்களை நடு வதற்கு.முடிவாகியுள்ளது.

(203-95)

## யாழ். மாவட்டத்தில் பரிகாரக்கல்வி அடுத்தவருடம் நடைமுறைக்கு வரும்

நல்லூர்,நவ.3

தேசிய கல்வித்திட்டத்தின் பரிகாரக் கல்வி செயற்திட்டம் யாழ்.மாவட்டத்தில் அடுத்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத் தப்படவுள்ளது.

மெல்லக்கற்கும் மாணவர்களின் கல்வி மட்டத்தை மேம்படுத்துவதற்காக ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதியுதவி யுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் இத்திட்டத்திற்கான பயிற்சிகள் ஆசிரியர் களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக யாழ் இந்து மகளிர் கல் லூரியில் பன்னிரண்டு ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டதை அடுத்து கடந்த வாரம் கோப்பாய் கிறிஸ்தவக் கல் லூரியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அறுபது ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப் பட்டன. இப்பயிற்சிகள் கடந்த 31ஆம் திகதி முடிவடைந்துள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கமைய முன் னெடுக்கப்பட்ட பரிகாரக் கல்வித்திட் டத்தை யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.இரவீந்திரா நடைமுறைப் படுத்தி வருகின்றார்.

(203-111)

## தென்னிந்திய திருச்சபையின் வரலாற்று நூல் வெளியீடு

வலி.வடக்கு,நவ.3

தென்னிந்தியத் திருச்சபையின் 60 ஆவது ஆண்டு விழாவையொட்டி திருச் சபையின் வரலாறுகள் உள்ளடங்கலான நூல் ஒன்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரி ஒட்லி மண்டபத்தில் பேராயர் அதி வணக்கத்திற்குரிய கலாநிதி டானியல் செல்வரத்தினம் தியாகராசா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றன.

இந்நூலினை கொழும்புப் பகுதிக்கான செயலாளரும் யாழ். ஆதீனத்தின் மருத்து வப் பணிகளுக்கான குழுவின் தலைவரு மான சீ.ரி.சின்னக்கோன் வெளியிட்டு வைக்க முதல் பிரதியை பிரதம விருந்தின ராகக் கலந்துகொண்ட இலங்கை மெத டிஸ் திருச்சபையின் உப தலைவரும் சட் டத்தரணியுமான எம்.எ.சுமந்திரன் பெற்றுக் கொண்டார். (203-86)

## வீட்டாரை அச்சுறுத்தி, குடும்பத்தவரை வெட்டி 5லட்சம் ரூபா பெறுமதியான நகை, பணம் சூறை

### மானிப்பாயில் புதன் நள்ளிரவு சம்பவம்

யாழ்ப்பாணம், நவ.3

மானிப்பாயில் உள்ள வீடு ஒன்றுக்குள் ஆயுதங்களுடன் நள்ளிரவு வேளை புகுந்த கொள்ளையர் கோஷ்டி, வீட்டில் இருந்த வர்களை அச்சுறுத்தி, அனைவரையும் ஓர் இடத்தில் அமரவைத்துவிட்டு, உரிமையா ளரை வெட்டிக்காயப்படுத்தி ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை அபகரித் துச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் மானிப்பாய் - இணுவில் வீதியில் உள்ள வீட்டிலேயே நடைபெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்த குடும் பத் தலைவரான கணபதி பத்மநாதன் (வயது - 45) யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க் கப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட வீட்டுக்குள் ஆயுதங்கள் தாங்கிய ஏழு பேர் கொண்ட கொள்ளைக் கோஷ்டி ஒன்று புகுந்து வீட்டில் இருந்த வர்களை ஓரிடத்தில் அமருமாறு அச்சுறுத்தி யது. குடும்பத் தலைவர் இருக்க மறுத்த போது அவரை கத்தியால் வெட்டியது.

பின்னர் அரைமணி நேரம் வீட்டில் தேடுதல் நடத்தி பெறுமதியான நகைகள், பணம் என்பவற்றை சூறையாடிச் சென்ற தாகவும் கூறப்பட்டது.

ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையர் கோஷ்டி சூறையாடிச் சென்றதாக அறிய வருகிறது.

இச்சம்பவம் குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(அ-1-203-15-78)

## கச்சாய் பாடசாலைக்கு மின் இணைப்பு கிடைத்தது

யாழ்ப்பாணம்,நவ.3

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் இயங்கி வரும் சக்தி அம்மன் வித்தியாலயத்திற்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினின் நலத் திட்டங்களில் ஒன்றாக இந்த மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

சம்பிரதாய பூர்வமாக மின் இணைப்பு வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

சர்வதேச லயன்ஸ் கழக ஆளுநர் லயன் செ. இராகவன் மின் ஆழியை இயக்கி மின் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

அத்துடன் வித்தியாலய மாணவர் களுக்கு சாவகச்சேரி கோயிற்குடியிருப் பைச் சேர்ந்தவரும் கொட்டகென மேற்கு லயன்ஸ் கழகத் தலைவருமான லயன் சீமாட்டி நளினி கணேசயோகனால் அனுப் பப்பட்டிருந்த பாடசாலை பைகளை மாவட்ட ஆளுநர் வழங்கினார். (202-207)

## சிறுவனின் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு கொமர்ஷல் வங்கி ஊழியர்கள் நிதியுதவி

யாழ்ப்பாணம், நவ.3

இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வரும் இள வாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாண வன் செபஸ்ரியன் அருள்யோதீஸ்வரன் (வயது 15) என்ற சிறுவனின் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு யாழ். கொமர்ஷல் வங்கிக் கிளைகள் அனைத்தும் இணைந்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளன.

ஹென்றியரசர் கல்லூரியில் தரம் 10 இல் கல்வி பயிலும் இந்த மாணவனின் சிறுநீரக மாற்றுச் சிகிச் சைக்கு உதவிபுரியு மாறு அவரது பெற் றோரின் வேண்டு கோளை உதயன் முக் கியத்தும் கொடுத் துச் செய்தியாக கடந்த ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி வெளிப் படுத்தியிருந்தது.



உதயனில் வெளி யான செய்தியைப் படித்த யாழ்ப்பாணத் தில் உள்ள கொமர் ஷல் வங்கிக் கிளை களின் ஊழியர்களின் உதவித் தொகை சேகரிக்கும் திட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். இதனடிப்படை யில் கொமர்ஷல் வங்கியின் ஊழியர்களா லும், விளையாட்டுக் கழகத்தாலும் நன் கொடையாக வழங்கப்பட்ட 50ஆயிரம் ரூபா பணம் அண்மையில் ஹென்றியரசர் கல்லூரி அதிபரிடம் வழங்கப்பட்டது.

அண்மையில் யாழ். வந்த கொமர்ஷல் வங்கியின் ஏற்றுமதிப் பிரிவின் தலை வரும் லயன்ஸ் கழகத்தின் 306 பி மாவட்ட ஆளு நருமாகிய லயன் எஸ்.ராகவன் இள வாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்திரு. கே.ஜேம்ஸ் சிங்கராய ரிடம் இதற்கான காசோலையை வழங்கி னார்.

இந்த வைபவத்தில் கொமர்ஷல் வங்கி யின் யாழ். கிளை முகாமையாளர் லயன் எஸ்.ரவீந்திரா உட்பட ஊழியர்கள் பலர் கலந்துகொண்டனர். (50)

## உள்ளூராட்சி அலுவலர்களுக்கு ஆங்கிலமொழிக் கற்கை நெறி

யாழ்ப்பாணம்,நவ.3

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி அலுவலர் களுக்கு சான்றிதழுக்கான ஆங்கில மொழி கற்கைநெறி கொழும்பு பல்கலைக்கழகத் தில் டிசெம்பர் நடுப்பகுதியில் இடம்பெற வுள்ளது.

இக்கற்கைநெறிகளுக்கு விண்ணப் பித்தவர்களுக்கான அனுமதித் தேர்வு எதிர் வரும் 25ஆம் திகதி கொழும்பு 7 இல் அமைந்துள்ள இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்தில் இடம்பெறும்.

உள்ளூராட்சி மன்ற செயலாளர் ஊடாக விண்ணப்பித்த சகலரும் மேற்படி பரீட் சைக்கு உரிய நேரத்தில் சமுகம் தருமா றும்-

அங்கு வைத்து அனுமதி அட்டைகள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட் டுள்ளது. (203-95)

## உள்ளூராட்சி சபைகளில் மூலதன வேலைத்திட்டம் முன்மொழிவுகளை அனுப்புமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.3

உள்ளூராட்சி சபைகளில் அடுத்த வரு டம் (2008) மேற்கெள்ளப்படவுள்ள பிர மாண அடிப்படையிலான மூலதன வேலைத் திட்டம் தொடர்பான முன்மொழிவுகளை அனுப்புமாறு மாகாண உள்ளூராட்சி ஆணை யாளர் கேட்டுள்ளார்.

நூல் நிலையக் கட்டட மேம்பாட்டு வேலை, நூல்கள், நூல் நிலைய தளபாடக் கொள்வனவு, அலுவலக கட்டடத் திருத்தம், அலுவலக உபகரணங்கள் கொள்வனவு, முன்பள்ளிக் கட்டட மேம்பாட்டு வேலை கள், முன்பள்ளி உபகரணம், தளபாடக் கொள்வனவு, சனசமூக நிலைய கட்டட மேம்பாட்டு வேலை ஆகிய பிரிவுகளுக்கு ஒதுக்கீடுகளை முன்னுரிமை அடிப்படை யில் வழங்கப்படவுள்ளன. முன்மொழிவு களை எதிர்வரும் ஏழாம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள் ளது.

(203-95)

## குடிதண்ணீர் வசதியற்ற முன்பள்ளிகளுக்கு வாளிகள்

யாழ்ப்பாணம்,நவ.3

குடிதண்ணீர் வசதியற்ற முன்பள்ளி களுக்கு பிளாஸ்ரிக் வாளிகள் வழங்கப்பட வுள்ளன.

வேலணை பிரதேச சபை செயலாளர் கை.மகேந்திரலிங்கம் இதற்கான நடவடிக் கையினை எடுத்துள்ளார்.

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட மிகவும் பின்தங்கிய முன்பள்ளிகளான புங்குடுதீவு, நயினாதீவு, மண்டைதீவு, வேலணை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த முன்பள்ளிகளுக்கு குடிதண்ணீர் வாளிகள் வழங்கப்படவுள்ளன. (203-95)

## லயன்ஸ் கழக பொன்விழா நிகழ்வுகள் வடமராட்சியிலும் நடைபெற்றன

பருத்தித்துறை,நவ.3

சர்வதேச லயன்ஸ் கழக பொன்விழாவும், லயன்ஸ்கழக 306பி1 ஆளுநரின் உத்தி யோகபூர்வ வருகை வரவேற்பு விழாவும் வடமராட்சியில் லயன்ஸ்கழக வலயத் தலைவர் லயன் வைத்தியகலாநிதி எம்.தங் கராஜா தலைமையில் நடைபெற்றன.

லயன். எஸ்.கதிரமலையின் இல்லத்தில் நடைபெற்ற இவ்விழாவை வடமராட்சி, அச்சுவேலி, உரும்பிராய் லயன்ஸ் கழகங் கள் இணைந்து ஒழுங்கு செய்திருந்தன.

வடமராட்சிக்கு வருகை தந்திருந்த லயன்ஸ் கழக ஆளுநர் லயன் எஸ்.இராக வனும், லயன் சீமாட்டி திருமதி றஞ்சினி யும் விருந்தினர்களும் நெல்லியடிக் காளி கோயிலில் இடம்பெற்ற விசேட பூசையில் கலந்துகொண்டபின் விழாமண்டபம்வரை ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டனர்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா இன்றைய கல்வி நிலை பற்றி உரையாற்றினார்.

இவ்விழாவிலே மாணவர்களுக்கி டையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற் றியீட்டியவர்களுக்கும் கல்வியில் சாதனை கள் நிகழ்த்திய மாணவர்களுக்கும் பரிசில் கள் வழங்கப்பட்டன.

கண்பார்வை குறைந்தவர்களுக்கான இலவசக் கண்ணாடிகளும்கண்பார்வை அற்றவர்களுக்கான அன்பளிப்புகளும் வழங் கப்பட்டன.

விழாவிலே விசேட விருந்தினராக பருத் தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் கலந்துகொண்டார்.

புதிய அங்கத்தவர்களை ஆளுநர்கழகத் தில் இணைத்த நிகழ்வும் இடம்பெற்றது. வலயத் தலைவர் லயன் வைத்திய கலாநிதி எம்.தங்கராஜா, வடமராட்சி லயன்ஸ் கழக தலைவர் எஸ்.அருந்தவநேசன் ஆகியோ ரின் சேவைகள் பாராட்டப்பட்டு அவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (203-218)

## நம்பிக்கை மோசடி செய்ததாகக் கூறப்படும் நகைக்கடை உரிமையாளருக்கு விளக்கமறியல்

பருத்தித்துறை,நவ.3

நம்பிக்கை மோசடி செய்ததாகக் கூறப் படும் நகைக்கடை உரிமையாளர் ஒரு வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் கே.அரியநாயகம் பொலிஸாருக்கு உத்தரவிட்டதுடன் நெல் லியடிப் பகுதியில் அமைந்துள்ள அவரது கடையையும் 'சீல்' வைக்குமாறு உத்தர விட்டுள்ளார்.

கரவெட்டியைச் சேர்ந்த விமலதாஸ் புஸ்பராணி என்பவரது தங்க நகைகளில் இந்த நகைக்கடை உரிமையாளர் நம் பிக்கை மோசடி செய்ததாக நெல்லியடிப் பொலிஸில் புகார் செய்யப்பட்டதைய டுத்து நெல்லியடிப் பொலீசார் விசாரணை களை மேற்கொண்டனர்.

விசாரணைகளிலிருந்து இந்தச் சந்தேக நபர் குறித்த பெண்ணுக்கு நம்பிக்கை மோசடி செய்தது மட்டுமன்றி மேலும் நால் பேரின் தங்க நகைகளிலும் நம்பிக்கை மோசடி செய்தமை தெரியவந்தது.

இவர் நகை செய்வதற்குப் பணம் பெற் றபின் நகைகளை வழங்குவதில்லை என் றும் நகை அடகு பிடிப்போரிடம் முதலை யும் வட்டியையும் பெற்றபின் அதற்கான நகைகளை வழங்காது நம்பிக்கை மோசடி செய்து வந்தததாகவும் பொலீஸார் மேற் கொண்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்தச் சந்தேக நபரை நெல்லியடிப் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிவான் கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்தனர். வழக்கை விசாரணை செய்த நீதிபதி அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். நகைக்கடை பொலிஸாரினால் மூடப்பட்டு சீல் வைக் கப்பட்டது.

நெல்லியடிப் பொலிஸார் இந்நகைக் கடை உரிமையாளரின் நம்பிக்கை மோசடி கள் பற்றித் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(203-218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## பரமு முத்துக்குமாரசாமி

*(முன்னாள் கட்டடப் பரிசோதகர் - கல்வித்திணைக்களம்)*

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமு முத்துக்குமாரசாமி அவர்கள் 31.10.2007 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பரமு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் அணந்தலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் சுகந்தன் (U.K.), சயந்தன் (U.K.), காலஞ்சென்றவர்களான அஜந்தன், அரவிந்தன் மற்றும் திருமதி பூங்குழலி ஆகியோரின் அன்புத் தந்தையும் தாமோதரம்பிள்ளை (U.K.), அமரர்கள் பொன்னுத்துரை, வீரசிங்கம் மற்றும் திருமதி புவனேஸ்வரி, தருமலிங்கம், காலஞ்சென்ற விபுலானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அமரர் சிவஞானசுந்தரம் மற்றும் செல்லம்மா தம்பதியரின் மருமகனும் பபிதா (U.K). சாம்சன் (Manager-Micro PC System, Jaffna) ஆகியோரின் அன்பு மாமனும் மதுஷன், கயிலினி, லக்ஷாங்கனி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.50, விபுலானந்தர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை (04.11.2007) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.50, விபுலானந்தர் வீதி,*
*கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம்.* (67571)
தகவல்:
**குடும்பத்தினர்.**

## வெள்ளையன் பரமகுரு (பரமு)



வீரபாலன்தோட்டம், கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வெள்ளையன் பரமகுரு அவர்கள் 31.10.2007 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெள்ளையன்-லக்சுமி தம்பதியரின் மூத்த மகனும் ஆழ்வான் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் பமல் (டோகா), வனிதா, புனிதா, பரன் (டோகா), பனிதா, பரிசன், பத்மா, பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீரபாலன்தோட்டம்,*
*கரவெட்டி மேற்கு, கரவெட்டி*
*077 6227949, 077 9946771.* (67560)
தகவல்:
**குடும்பத்தினர்.**

## இராசையா இரத்தினசிங்கம்



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா இரத்தினசிங்கம் அவர்கள் 01.11.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் தங்கரத்தினம் தம்பதியரின் மருமகனும் மகாலட்சுமியின் அன்புக்கணவரும் இரத்தினகுமார் (ஜேர்மனி), ரஜீந்தன் (கொல்ன்ட்), றமணன் (லண்டன்), செந்தூரன் (இத்தாலி), மயூரன் (மதன் - மலேசியா), வேணுஜா (கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவி - ஆண்டு - 10) ஆகியோரின் அன்பு தந்தையும் சாமினி, கஜானி ஆகியோரின் அன்பு மாமனும் ஆர்த்தி, ஆரூபன், சபீனா ஆகியோரின் பேரனும் அமரர் துரைராசா, சோதிமணி, பஞ்சாட்சரம் (கனடா), சுபத்திரை, இராசலிங்கம் (கனடா), அன்னலிங்கம் (கோண்டாவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரி, செல்வநாயகம், கனகம்மா (கனடா), பழனி ஆண்டி, கனகேஸ்வரி (கனடா), பரமேஸ்வரி, மகேந்திரன் - சசி (ஜேர்மனி), தெய்வேந்திரம் - வண்ணம், இராசேந்திரம், காஞ்சனாதேவி - கிருஷ்ணகுமார் (சுவிஸ்), கமலாதேவி - மகாலிங்கம், சொரூபினி - ரவீந்திரன் (லண்டன்), ரவீந்திரன் (கோண்டாவில்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.11.2007) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.K.S.*றோட்,*
*பாரதி ஒழுங்கை,*
*கோண்டாவில் மேற்கு.* (67558)
தகவல்:-
**இ.பூபாலசுந்தரம்.**

## சிதம்பரப்பிள்ளை வள்ளியம்மை



மண்டைதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், ஐந்து சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை வள்ளியம்மை நேற்று (02.11.2007) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் அமரர் வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் அமரர்களான வேலுப்பிள்ளை -சின்னாட்டியா தம்பதியரின் அன்பு மருமகளும் அமரர்களான வைத்தி- வேலசியா தம்பதியரின் மகளும் நாகராசா, நல்லம்மா, அமரர் சுப்பையா, ஆறுமுகம் (லண்டன்), அமரர் செல்லத்துரை, கண்மணி, மார்க்கண்டு, அமரர் வசந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தாயும் வள்ளியம்மை, அமரர் அற்புதராசா, தங்கம்மா, மகாலெச்சுமி, அமரர் யோகம்மா, அமரர் சுந்தரலிங்கம், இராசாம்பாள், இராதா ஆகி யோரின் பாசமிகு மாமியாரும் வைத்தி கந்தையாவின் சகோதரியும் கதிரவேலு - மாணிக்கம், சந்திரன் - வேபி (இந்தியா), அமரர் பெருமாள் - பரிமளம், இராமலிங்கம் - கனகம்மா ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2007) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வெள்ளாந்தெரு,*
*ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.*
(67569)
தகவல்:
**ஆறுமுகம்** (மகன்- லண்டன்)
**ராஜன் குரூசாம்** (பேரன்- லண்டன்).

## உணவு விநியோகம் தொடர்பாக செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ். மாவட்டத்தில் உணவு விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். செயலகத்தில் அரசஅதிபர் க.கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சகல பிரதேச செயலர்கள், உதவிஅரச அதிபர்கள், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், ப.நோ.கூ.சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோரைத் தமது பொருள் இருப்பு விவரங்களுடன் தவறாது கலந்த கொள்ளுமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார். (203)

## ஆஸ்துமா நோய் பற்றிய கருத்தரங்கும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ.03

ஆஸ்துமா நோய் பற்றிய மருத்துவக் கருத்தரங்கும் நூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சமுதாய மருத்துவத்துறையினரின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள இந்நிகழ்வில் யாழ். போதானா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்களால் ஆஸ்துமா நோய் பற்றிய தமிழ் மொழி மூலமான விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் நிகழ்வில் கலந்து கொள்ளும் நோயாளர்கள் மற்றும் ஏனையோருக்கும் ஆஸ்துமா நோய் பற்றிய சந்தேகங்களுக்கான விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

இந் நிகழ்வில் ஆஸ்துமா நோய் பற்றிய விளக்கம் என்னும் கை நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (203)

## தின்பண்டங்களின் விலைகள் அதிகரிப்பு

வலி.தென்மேற்கு,நவ.3

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் உணவகங்களிலும் தேனீர் கடைகளிலும் தோசை, இடியப்பம், வாய்ப்பன் போன்ற தின்பண்டங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மாவின் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்த இந்த உணவுகளின் விலைகளும் உயர்த்தப்பட்டுள்ளன. இதனால் உணவகங்களை நாடிச் செல்வோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. (203-135)

## கொடுப்பனவுகளைப் பெறுமாறு ஒப்பந்தகாரருக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.3

தென்மராட்சி கல்வி வலயக் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் ஈ.எஸ்.டி.பி., பி.எஸ்.டி ஆகிய வேலைத் திட்டங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் உரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு ஒப்பந்தகாரர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (203-207)

### கோழி இறைச்சி விற்பனை

புறொயிலர், ஊர்சேவல்கள் என்பன மிக மலிவான விலைகளில் சுத்தம் செய்து எந்த நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு: மல்ரியாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
(67563)

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

சொந்தப் பாவனையில் புதிய நிலையில் உள்ள பலன் பிளஸ் விற்பனைக்கு.
தொடர்பு: 021- 222- 5697, 077 5052289
5/3, அல்பாந்திரி ஒழுங்கை, மானிப்பாய்.
(67570)

### விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், மின்சார உபகரணங்கள், குசினிப் பொருள்கள், அல்சேஷன் நாய், நாய்க்கூடு ஆகியன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
P.T.பாலன், இல 45, சிவகுருநாதன் வீதி, யாழ்ப்பாணம். (67575)

### உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் (A.T.I) *யாழ்ப்பாணம்.*

**பட்டமளிப்பு - (23 Nov 2007) கலந்துரையாடல்**

*பங்குகொள்ளும் மாணவர்கள் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் பங்கு பற்றவும்.*
[illegible]
(67568)

## நன்றியுடன் பாராட்டுகின்றோம்



*2007இல் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 143 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்த*
யா/ நெடுந்தீவு ஸ்ரீஸ்கந்தா வித்தியாலய
*மாணவியான எங்கள் மகள்*
**செல்வி டனிஷா பரமலிங்கம்**
*அவர்களைப் பாராட்டுவதுடன் அல்லும் பகலும் அயராதுழைத்துக் கற்பித்த அதிபர், ஆசிரியர்களை மனமார்ந்த நன்றியுடன் பாராட்டி மகிழ்கின்றோம்.*

*2ஆம் வட்டாரம்,*
*நெடுந்தீவு.* (67523)
**பெற்றோர்.**

## யா/ இணுவில் மத்தியகல்லூரி - 2007

"அரிச்சந்திர மயான காண்டம்" இசை நாடக இறுவட்டு வெளியீடும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு வைபவமும்

**இடம் :-** கல்லூரி ஆரம்பப்பிரிவு மண்டபம்
**காலம் :-** இன்று (03.11.2007) சனிக்கிழமை பி.ப 1.30 மணி
**தலைவர் :-** திரு அ.சதானந்தன் (கல்லூரி முதல்வர்)
**பிரதம விருந்தினர் :-** உயர்திரு செ.குபேரநாதன் (கோட்டக்கல்விப் பணிப்பாளர், உடுவில்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
**கல்லூரிச் சமூகம்.**

(67559)

குறிப்பு:- இறுவட்டு பிரதி ஒன்று ரூபா 350/= இற்கு பெற்றுக்கொள்ளலாம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 * 08 * 1937



உதிர்வு 14 * 11 * 2006

### திருமதி சின்னத்துரை வள்ளிப்பிள்ளை

அன்பிற்கு ஆபரணமாய்
ஊருக்கே உரியவராய்
ஏற்றத்தின் பிறப்பிடமாய்
ஒழுக்க வழிகாட்டியாய்
எம்மை வாழவைத்த
தெய்வமே! எமது பாசத்துளிகளை
ஓராண்டின் நினைவாக
பாதம் சமர்ப்பிக்கின்றோம்.

*எமது அன்புத் தெய்வத்தின் நினைவாக அன்னாரது இல்லத்தில் இன்று ஆத்ம சாந்திப் பூசை நடைபெறும்.*

*தலங்கரை வீதி,*
*கோண்டாவில்.* (சி/54226)
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னப்பிள்ளை வினாசித்தம்பி

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் புளியம்பொக்கணை, நாகதம்பிரான் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னப்பிள்ளை வினாசித்தம்பி அவர்கள் (31.10.2007) புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய கிராமசேவகர் கந்தையா - சின்னக்குட்டி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், வினாசித்தம்பியின் மனைவியும் சிவதவநாயகி, சிவயோகலிங்கம் (லண்டன்), கணேசலிங்கம், கோகுலவாணி, பரமலிங்கம், புஸ்பராணி (ஆசிரியை நாகேந்திரபுரம், அரசினர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும், யோகநாதன் (மட்டுவில் வடக்கு), றஜினி, யோகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரன் (சின்னத்தம்பி), குமுதா ஆகியோரின் மாமியும், பாலாம்பிகை, நாகம்மா, பாலசுப்பிரமணியம், வினாயகமூர்த்தி, லிங்கேஸ்வரி ஆகியோரின் உடன் பிறப்புமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (01.11.2007) வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு புளியம்பொக்கணை இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.* (67572)
தகவல்:
**V.கணேசலிங்கம்** (மகன்).

## திருமதி சின்னம்மா ஆறுமுகம்

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா ஆறுமுகம் 01.11.2007 வியாழக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு ஆறுமுகம் அவர்களது அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சின்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் முருகேசு தம்பதியரின் மருமகளும் பிரபாலினியின் அன்புத் தாயும் சுதாகரனின் அன்பு மாமியும் முத்துக்குமாரசாமி, நாகபூசணி, நாகேந்திரன், கண்ணகாதேவி, கங்காதரன், நடேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.11.2007) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் கைதடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி மேற்கு, கைதடி.* (சி/54222)
தகவல்:
**பிரபாலினி** (மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் வெற்றியும் புலிகளின் வெற்றியும் என்றைக்கும் நிரந்தரமாக நீடிக்கமாட்டாது!

## ஐ.தே.க. அமைப்பாளர் எஸ்.பி. திஸாநாயக்கா கூறுகிறார்

கொழும்பு, நவ.3

கிழக்கு மாகாணத்தில் அரசு பெற்ற வெற்றியும், அநுராதபுர விமானத் தாக்குதலில் புலிகளின் வெற்றியும் நிரந்தரமானவை அல்ல. அவ்வப்போது பெறும் வெற்றிகளைக் கண்டு பெருமை அடித்துக் கொண்டால் அது நாட்டில் பெரும் சீரழிவையே ஏற்படுத்தும்- என்று எச்சரிக்கை விடுக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸாநாயக்க.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அரசும் இராணுவ நடவடிக்கைகள் மூலம் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுவிடலாம் என்று கருதி யுத்த முனைப்புடன் செயற்படுகின்றனர். ஆனால் அது ஒருபோதும் வெற்றி அளிக்காது என்றும் திஸாநாயக்க கூறினார்.

நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பொறுப்பை ஏற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியடைய இன்னும் ஒரு சில தினங்களே இருக்கின்றன.

ஆனால், இந்த இரண்டு வருட காலத்தில் நாட்டின் பொருளாதாரமும் தேசியப் பிரச்சினையும் நாட்டைப் பெரும் பின்னடைவுக்குத் தள்ளி விட்டுள்ளன.

இராணுவ நடவடிக்கையின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதை அனுபவ பூர்வமாகக் கண்டுள்ளோம்.

கிழக்கு மாகாணத்தை இராணுவ நடவடிக்கைகளின் மூலம் புலிகளிடம் இருந்து கைப்பற்றிவிட்டோம் என்று விழாக் கொண்டாடுகின்றது அரசு.

இவ் வெற்றிக்கு முப்படையினரும் பாரிய பங்களிப்புச் செய்துள்ளனர். அவர்கள் செய்துள்ள தியாகம் அளவிடப்பட முடியாதது. இந்த இறுமாப்பில் இருக்கும்போதே புலிகள் அநுராதபுர விமானத்தளத்தை அடித்து நொறுக்கிவிட்டனர். இது வெற்றிகளோடு முன்நோக்கிச் சென்றுகொண்டிருந்த படைத் தரப்பினர் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

அநுராதபுர விமானப் படைத்தளத் தாக்குதலின்போது 21 கரும்புலி தற்கொலையாளிகள் உயிரிழந்துள்ளனர். எண்ணிக்கை 21ஆக இருந்தாலும் அவர்களின்பெறுமதி இராணுவம், பீரங்கிகள், யுத்த விமானங்கள், ஏவுகணைகள், ரொக்கட்டுக்கள் என்பவற்றை விடவும் உயர்ந்தது.

இது புலிகளுக்கு ஏற்பட்ட பாரிய இழப்பாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பம் முதலே இனப்பிரச்சினையை பேச்சின் மூலமே தீர்க்கவேண்டும் என வலியுறுத்தி வருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சியின்போது லலித் அத்துலக் முதலி தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்தார். அப்போது நமது படைகள் வடமராட்சியைக் கைப்பற்றியபோது பிரபாகரனின் இரண்டு கண்களையும் பிடுங்கி விட்டோம் என இங்கு கூறி விமர்சித்தார்.

அதேபோன்று, சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது ரத்வத்த பாதுகாப்பு அமைச்சராக இருந்தார். அச்சமயம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது பிரபாகரனின் தலையைத் துண்டித்துவிட்டோம் எனக் கூறி மகிழ்ந்தனர். ஆனால் பின்னர் நடந்தது என்ன?

ஒட்டுசுட்டான் முதல் ஓமந்தை வரையிலான 90 கிலோமீற்றர் தூரத்தைக் கைப்பற்றுவதற்கு எமக்கு இரண்டு வருடங்கள் பிடித்தன. ஆனால் 'ஓயாத அலைகள்' ஓயும் முன்னரே புலிகள் இரண்டே தினங்களில் அத்தனை இடத்தையும் பிடித்துக் கொண்டனர்.

இதேபோன்று, டி.பி.விஜேதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது கிழக்கு மாகாணம் முழுவதையும் அரசின் கட்டுப்பாட்டில் வைத்திருந்தோம்.

அப்போது அங்கே உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலையும் அவர் நடத்தினார். ஆனால், சந்திரிகா ஜனாதிபதியான பின் அத்தனையையும் இழந்தோம்.

ஆனையிறவு முதல் முல்லைத்தீவு வரை அத்தனையையும் இழந்தோம். பல ஆயிரம் படையினரையும் கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான ஆயுதங்களையும் இழந்தோம்.

ஆகவே, அரசும், புலிகளும் மாறி மாறிப் பெறும் வெற்றிகள் ஒருபோதும் நிரந்தரமாகிவிடாது.

இதன் காரணமாகவே நாம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்படிக்கை ஒன்றைச்செய்து கொண்டு பேச்சுகளை ஆரம்பித்தோம். ஆனால், சந்திரிகா குமாரதுங்க எமது ஆட்சியைக் கலைத்து சமாதான முன்னெடுப்புகளுக்கு முட்டுக் கட்டை போட்டுவிட்டார்.

அதிகாரப் பரவலாக்கல் மூலம் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

இந்த முன்னெடுப்புடன் நாம் செயற்பட்டால் இந்தியா உட்பட சர்வதேச சமூகம் நமக்கு ஆதரவளிக்கும்.

எனவே, அரசு பேச்சுகளின் மூலம் பிரச்சினையைத் தீர்க்க முயலும் போது புலிகள் அதனை உதாசீனப்படுத்தினால் சர்வதேச சமூகத்தின் உதவிகளை மட்டுப்படுத்த முடியும்.

இதனை உணர்ந்து அரசு யுத்த முனைப்பைக் கைவிடவேண்டும் - என்றும் எஸ்.பி.திஸாநாயக்க கூறினார். (சி)

## புலிகளின் தொலைக்காட்சியின் சிங்கள சேவை ஆரம்பம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தொலைக்காட்சிச் சேவையான தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி (NTT) சிங்கள மொழி மூலமான சேவை ஒன்றை நேற்று முன்தினம் ஆரம்பித்திருக்கிறது.

இதுவரை காலமும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஒளிபரப்புக்களை வழங்கி வந்த தொலைக்காட்சி சேவை, சிங்கள மொழியிலான ஒளிபரப்பை ஆரம்பித்துள்ளது - என்று தெரிவித்துள்ளது.

தமிழ், ஆங்கில ஒளிபரப்புகளைத் தொடர்ந்து சிங்கள சேவை ஒளிபரப்பப்படும் என்று கூறப்பட்டது. தமிழீழ தேசியத் தொலைக்காட்சிச் சேவையை யாழ்ப்பாணத்தில் சாதாரணமாக தெளிவாகப் பார்க்க முடியும் - எனவும் கூறப்படுகின்றது. (க-9)

## இலங்கைக்கான பிரிட்டன் தூதராக கலாநிதி பீற்றர் ஹெயிஸ் நியமனம்

கொழும்பு, நவ.3

இலங்கைக்கான புதிய பிரிட்டன் உயர்ஸ்தனிகராகக் கலா நிதி பீற்றர் ஹெயிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிறிதொரு இராஜதந்திர சேவைக்கு மாற்றலாகிச் செல்லும் டொமினிக் சில்கொட்டின் இடத்துக்கே பீற்றர் ஹெயிஸ் நிய மிக்கப்பட்டுள்ளார்.

ஹெயிஸ் அடுத்த ஆண்டு ஜனவரியில் தனது கடமை களைப் பொறுப்பேற்பார் என இலங்கைக்கான பிரிட்டன் உயர் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டுவரை பிரிட் டன் வெளிவிவகார அமைச்சில் வெளியுறவுத்துறை அமைச்சருக்கான முதன்மைப் பிரத்தியேக செயலாளராகக் கடமையாற்றும் ஹெயிஸ் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சில் பல உயர் பதவிகளை வகித்துள்ளார். (50)

# விளையாட்டில் மாணவரின் பங்களிப்பை பதிவுகளாக்குவது எதிர்காலத்தில் மிக அவசியம்



விளையாட்டுத்துறைகளில் தாம் வழங்கும் பங்களிப்புத் தொடர்பான பதிவுகளைப் பேண வேண்டிய அவசியம் பாடசாலை மாணவர்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது.

தமது எதிர்காலக் கல்வி நடவடிக்கைகளுக்கும் சரி தொழில் வாய்ப்பைப்பெறும் நடவடிக்கைகளுக்கும் சரி விளையாட்டுத் துறையில் கூடிய பங்களிப்புக் குறித்த ஆவணங்கள் மிகவும் முக்கியமாகின்றன.

பல பாடசாலைகளில் விளையாட்டுத் துறை தொடர்பான பதிவுகள் உரியமுறையில் பேணப்படாத நிலையில் அவற்றில் ஈடுபடும் மாணவர்களே அவற்றைக் கவனமாகப் பேண வேண்டியது இப்போது கட்டாயமாகியுள்ளது.

**விளையாட்டு**

பாடசாலை மாணவர்கள் அனைவரும் விளையாட்டுத்துறையில் காட்டும் பங்களிப்பைப் பதிவுகளாக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறார் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் சகலதுறை வீரர் சிவசுப்பிரமணியம் விநோத்.

தனது பாடசாலை வாழ்க்கையில் தான் பங்கு கொண்ட விளையாட்டுத் தொடர்பான சகல விடயங்களையும் அவர் பதிவுகளாகப் பேணி வருகின்றமை பாராட்டுக்குரியது.

தனது ஆரம்பக் கல்வியை மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயத்தில் கற்ற விநோத் 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இணைந்து கொண்டார்.

தொடர்ந்து அங்கு கல்வி பயின்ற அவர் கடந்த உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி தற்போது பெறுபேறுக்காகக் காத்திருக்கிறார்.

பாடசாலை வாழ்க்கையில் இவர் ஒரு சகல துறைவீரராகத் திகழ்ந்துள்ளமை அவர் பேணி வரும் பதிவுகளின் மூலம் உறுதியாகின்றது.

அவர் அளித்த சிறிய செவ்வி வருமாறு:-

*கேள்வி:*-விளையாட்டுத்துறைச் சாதனைகள் பற்றி....

*பதில்:*- மானிப்பாய் இந்துக்கல்லூரியில் 6ஆம் ஆண்டில் அனுமதி பெற்ற 1999 ஆம் ஆண்டே 13 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணியில் இடம் பிடித்துக் கொண்டேன். தொடர்ந்து 2002 ஆம் ஆண்டு கிரிக்கெட் அணியிலும் இடம் பிடித்தேன்.

தடகள விளையாட்டுக்களான 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டங்கள், நீளம்பாய்தல் போன்ற போட்டிகளிலும் மாகாண மட்டம் வரை இடம் பெற்று பரிசில்களை வென்றிருக்கின்றேன்.

பாடசாலைக் கிரிக்கெட் போட்டிகளில் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கி 9 சதங்கள், 14 அரைச்சதங்கள் அடங்கலாக 3 ஆயிரத்து 228 ஓட்டங்களைக் குவித்துள்ளேன். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு எதிராக ஆகக் கூடு தலான 166 ஓட்டங்களைப் பெற்றுள்ளேன். வேகப்பந்து வீச்சாளராக இதுவரை 226 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளளேன். இதில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கு எதிரான போட்டியொன்றில் 19 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்களை வீழ்த்தியதைக் குறிப்பிடலாம்.

பாடசாலை கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான 2003 ஆம் ஆண்டுப் போட்டிகளில் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், சிறந்த ஆட்ட நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறேன். 2005 ஆம் ஆண்டு மீண்டும் சிறந்த துடுப்பாட்ட வீரனாகத் தெரிவானேன்.

*கேள்வி:*-மாகாண மட்டப் போட்டிகளில் பங்கு கொள்ளவில்லையா?

*பதில்:*-பங்கு கொண்டிருக்கிறேன். 2004 ஆம், 2006ஆம், 2007ஆம் ஆண்டுகளில் 17,19 வயதுப் பிரிவுகளில் வடக்கு - கிழக்கு மாகாணக் கிரிக்கெட் அணியிலும் இடம் பெற்றேன்.

*கேள்வி:*- தேசியப் போட்டிகளில் பங்கு பற்றிய அனுபவம் உண்டா?

### கிரிக்கெட் அக்கடமியில் வாய்ப்புக் கிடைத்தும்— நாட்டுச் சூழலால் அது கைநழுவியது என்கிறார் விநோத்

*பதில் :*-ஆம். 2006 ஆம் ஆண்டு மலேசியாவில் இடம்பெற்ற அந்நாட்டின் 19 வயதுக்குட்பட்ட தேசிய அணிக்கும் இலங்கையின் 19 வயதுக்குட்பட்ட தேசிய அணிக்கும் இடையே இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியில் பங்கு கொண்டேன். 3 போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில் எமது அணி 2 போட்டிகளில் வெற்றி பெற்றது. இப் போட்டிகளில் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளதுடன் 57 ஓட்டங்களையும் பெற்றேன்.



மலேசியாவில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியில் கலந்து கொண்டமையைப் பாராட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் வெற்றிக் கிண்ணம் வழங்கிப் பாராட்டிய போது.

*கேள்வி:*- இவற்றின் மூலம் ஏதாவது வாய்ப்புகள் உங்களுக்குக் கிடைத்ததா?

*பதில்:*- ஆம். இலங்கைக் கிரிக்கெட் அக்கடமியில் அனுமதி கிடைத்தது. எனினும் நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக அந்த வாய்ப்பைக் கைவிட வேண்டி ஏற்பட்டது.

*கேள்வி:*-உதைபந்தாட்டத்துறை ஈடுபாடு குறித்து என்ன சொல்கிறீர்கள்?

*பதில்:*-17 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் பாடசாலை அணியில் இடம் பெற்று கொழும்பில் இடம்பெற்ற போட்டியில் பங்குபற்றியுள்ளேன்.

**-செவ்வி: நேசன்**

*கேள்வி:*-தற்போது உயர்தரப் பரீட்சையில் தோற்றி பெறுபேறுக்காகக் காத்திருக்கின்ற வேளையில் விளையாட்டு ஆர்வம் எப்படி உள்ளது?

*பதில்:*-தற்போது நான் கல்வி கற்ற பாடசாலையின் உதைபந்தாட்ட அணிக்குப் பயிற்சியளித்து வருகின்றேன். அத்துடன் கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள், உதைபந்தாட்டப் போட்டிகள் என்பவற்றிலும் பங்கு கொண்டு விளையாடி வருகின்றேன்.

*கேள்வி:*- இறுதியாகப் பாடசாலை விளையாட்டு வீரர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

*பதில்:*-ஒன்று மட்டும்தான். அவர்கள் தங்கள் விளையாட்டுத்துறைப் பங்களிப்புக்களைத் தாங்களே பதிவு செய்து பேண வேண்டும். எதிர்காலத்தில் அது அவர்களுக்கு அனைத்துத்துறைகளுக்கும் தேவையானது -என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 ஆவது ஆண்டு திருமண நிறைவு விழா

திரு.திருமதி
**பத்மநாதன் ஜெயமலர்**



தம்பதிகள் 03.11.2007இல் 30ஆவது ஆண்டு நிறைவு காணும் இந் நன்நாளிலே எம் இனிய பெற்றோரே எம் வாழ்வுக்கு வழிகாட்டிய உங்கள் பொற் கரங்களுக்கு எம் நன்றிகள். வாழ்க்கை என்னும் கடலிலே வாழ்வு என்னும் படகினை இப்படித்தான் செலுத்த வேண்டும் என்ற சிறப்பான வழிகாட்டிய எம் பெற்றோரே நீங்கள் என்றும் இன்று போல் சீரும் சிறப்புமாக வாழவேண்டும் என்றும் பன்னெடுங் காலம் நோய் நொடிகள் இன்றி இன்னும் பல இன்பம் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
**மகேந்திரன்** (மருமகன் - டுபாய்), **பத்மரூபி** (மகள்),
**ஜெயந்ரூபன்** (மகன் - ஒட்டுநர்),
**ஜசிதரன்** (மருமகன் - டுபாய்), **பத்மலோஜினி** (மகள்),
**ஜெயரூபன்** (மகன் - டுபாய்), **பத்மரூபன்** (மகன்),
பேரப்பிள்ளைகள் - **ம.அபிதன், ம.சாருயன், ஜ.ஆதித்தியன்.**

நாதன் வெல்டிங் வேக்ஸ்,
27, சங்கிலியன் வீதி,
நல்லூர்.
(67422)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**வளர்மதி கல்விக் கழகம்**
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி

எமது கல்விக் கழகத்தில் கல்வி பயின்று 2007, 2006ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்

**2007ஆம் ஆண்டு**

| பெயர் | புள்ளி |
|---|---|
| இந்திரகுமார் ஜனுசிகா | 156 |
| கெங்காதரன் மதுரதன் | 154 |
| இரத்தினசிங்கம் துசாந்தி | 153 |
| புஸ்பராசா யதூசன் | 152 |
| சிறீஸ்கரன் சாருப்பிரியன் | 151 |
| குமாரசாமி சிந்தூரியா | 146 |
| இரங்கநாதன் அகிம்சா | 141 |
| சிங்கராசா நிதர்சனா | 141 |

**2006ஆம் ஆண்டு**

| | |
|---|---|
| தவப்பிரகாசம் பிரகாஸ் | 154 |
| ஸ்ரீபரன் ஆதித்தியன் | 154 |
| சுந்தரலிங்கம் ரோசினி | 144 |
| சிவானந்தம் சுபேதா | 139 |
| தவராசா நிலோஜினி | 133 |

இவர்களையும் வெட்டுப்புள்ளிக்கு மிக அண்மித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் இவர்களிற்கு கல்வி கற்பித்த கல்விக்கழக ஆசிரியர்களையும் விசேடமாக புலமைப் பரிசில் வகுப்புகளை எடுத்த ஆசிரியர் வே.அன்பழகன் அவர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வளர்மதி கல்விக் கழகம்,**
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
(67516)

ஓம் விஸ்வப் பிரமனே நமக

## 45ஆம் நாள் நினைவு நாள்



மண்ணில்
05
✱
06
✱
1969

விண்ணில்
20
✱
09
✱
2007

**அமரர் தர்மலிங்கம் கோகுலவேந்தன்**
(வேந்தன்)

*மலையொன்று சரிந்து மடிந்ததுவோ மண்மீது*
*சிலையாகி நிற்கின்றோம் சிந்துகின்றோம்*
*கண்ணீரைச் செந்நீராக்கி*
*நிலவில்லாத நீலவானம் போல் தவிக்கின்றோம்*
*நித்தம் உன் நினைவில் நாம்!*

இன்று (03.11.2007) சனிக்கிழமை மு.ப.10.30 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

152, சிவப்பிரகாசம் வீதி,
அரசடிச் சந்தி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (67516)
**குடும்பத்தினர்.**

## இறைச்சிக்கோழி விற்பனை

தரமான புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
(Electronic நிறுவை)
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர்.

## தவறிவிட்டது

ஆனந்தலிங்கம் மங்கயற்செல்வி என்பவரது தேசிய அ. அட்டை (586414410V) ஆடியபாதம் வீதியில் திருநெல்வேலி சென்று திரும்புகையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் இல.22/2, கொண்டலடி லேன், நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

## ICT Paper Class - R.Kumaran B.Sc.

பிரிவு I ஆரம்பம்: 03.11.2007 இன்று 11.30a.m.
Model Paper மற்றும் எதிர்பார்க்கை வினாக்கள்.
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.
(67362) T.P.: 0776577359

## புறொயிலர் விற்பனைக்கு

சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் 1Kg 550/= மட்டும்.
**குமரன் பாம்,**
227, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (67555)

## புறொயிலர் குஞ்சு விநியோகம்

தரமான புறொயிலர் குஞ்சு இன்று 03.11.2007 பெற்றுக்கொள்ளலாம்.
**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (67556)

## Organ/ Violin Notes

Organ, Guitar, வயலின், புல்லாங்குழல் ஆகியவற்றிற்கான சினிமாப் பாடல்களின் Notes விற்பனைக்குண்டு. Organ, வயலின் ஆகியனவும் விற்பனைக்குண்டு.
**சுர்வீனா இசைமன்றம்,**
75, கோயில் வீதி, நல்லூர்.
0713055991, 0777031293 (67554)

## வீடு விற்பனைக்கு

இல.31, கம்பஸ் லேன், திருநெல்வேலியில் அமைந்துள்ள அண்ணளவாக 1¼ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: இல.41, கம்பஸ் லேன்,
திருநெல்வேலி. T.P.: 077 4007281
[10.11.2007இற்கு முன் தொடர்புகொள்ளவும்]

## ஒத்துமாறல்

பயிற்சிபெற்ற ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றும் யாழ்.மாவட்டப் பாடசாலை ஆசிரியர் ஒருவர் கண்டி அல்லது கொழும்பு மாவட்டப் பாடசாலையில் உள்ள ஆசிரியரோடு ஒத்துமாற விரும்புகிறார்.
தொடர்பு: ஸ்ரேசன் றோட்,
0774218881 (67505) கோண்டாவில் மேற்கு.

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

தீபாவளியை முன்னிட்டு அதிகூடிய நிறையுள்ள புறொயிலர் கோழிகள் (4Kg மேல்) விற்பனை செய்யப்படும். மற்றும் கல்பேட், ஊர்ச் சேவல் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.
**தாசன் பாம்,**
158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (சி/54216)

## மணப்பெண்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்.
1974- M.B.B.S Doctor, 1976- சிவில் எஞ்சினியர்,
1970- றெயினிங் மாஸ்ரர், 1973- B.A. மாஸ்ரர்
(இன்னும் பல சாதகங்கள் இருக்கின்றன).
இவர்களுக்கு அழகிய பெண்கள் தேவை.
**கிருஷ்ணா திருமணசேவை**
செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். தொ.பே 222 9032 (67430)

## இறைச்சிக்கோழி

புறொயிலர், கல்பேட், சேவல் என்பன விற்பனைக்குண்டு.
1. NEW R.S.K. FARM, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.
2. NEW R.S.K FARM, K.K.S. றோட், சுன்னாகம், கொமர்ஷல் பாங் அருகில்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kg மேல் வளர்ச்சியடையக்கூடிய BAHRAHA புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு

- ✱ றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- ✱ மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- ✱ திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி.

222 2867.

## துயர் பகிர்கின்றோம்

எமது நிறுவனத்தின் சகபணியாளராகிய
செல்வி.ரங்கசாமி சுதர்சினி அவர்களின் பாசமிகு மைத்துனர்
**நடேசலிங்கம் பாஸ்கரன்**
அவர்கள் (01.11.2007) அன்று அகால மரணமடைந்ததையிட்டுத் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்,
சமூக அபிவிருத்தி மன்றம், யாழ்ப்பாணம்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **இராஜேஸ்வரி பத்மநாதன்**
(சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி)

| தோற்றம் | திருநிழல் |
|---|---|
| 26✱04✱1941 | 06✱11✱2004 |

திதி: 03.11.2007

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.
என்றும் நீங்காத நினைவுடன் வாழும்:
கணவர், பிள்ளைகள். (67501)

## கேள்விப் பத்திரம் கோரல்

care

இலங்கையில் 1956ஆம் ஆண்டில் இருந்து அபிவிருத்திப் புனர்வாழ்வுப் பணிகளில் முன்னணி நிறுவனமாக இயங்கிவரும் கெயார் சர்வதேச நிறுவனமானது அவசரகால உதவிப்பணிகளிலும், வீடமைப்பு, நீரும் சுகாதாரமும், வாழ்வாதாரப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடமைப்புப் பணிகளுக்கென இந்நிறுவனமானது சுதவு, யன்னல்களை விநியோகம் செய்யக்கூடிய பொருத்தமான ஒப்பந்தகாரரிடமிருந்து மூடிய கேள்விப் பத்திரங்களைக் கோருகின்றது. கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டிய இறுதிநாள் 2007ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 14ஆம் திகதி. மேலதிக விவரங்களையும் கேள்விப் பத்திர ஆவணங்களையும் **இல.15, கண்டி வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் அமைந்துள்ள கெயார் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இல. 021 2229763/9776
தொலைநகல் இல. 021 2222428

**ஆ.இராஜரட்ணம்,**
திட்டப்பணிப்பாளர்,
கெயார் சர்வதேசம் - யாழ்ப்பாணம்.
30.10.2007
(சி/54186)

## 4ஆம் ஆண்டு நினைவு




| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 04 | 03 |
| ✱ | ✱ |
| 11 | 11 |
| ✱ | ✱ |
| 1955 | 2003 |

**அமரர் இரத்தினகோபால் சிவராசா**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வான் உறையும்
தெய்வத்துள் வாழவென்று வழியமைத்த எம் அருமை அப்பாவே!
நான்கு ஆண்டுகள் உருண்டோடினாலும் உங்களின் நினைவுகள்
என்றும் எம் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும்.

**க.மோகனச்செல்வன்**
(குமரன் - மைத்துனர்)
6/6 B, கச்சமோட்டை,
விதானையார் வீதி,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம். (சி/54208)
**மனைவி, பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்



**கனகசபை கதிர்காமநாதன்**

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியாவில் வசிப்பவருமான கனகசபை கதிர்காமநாதன் (பொறியியலாளர் R.G.D., J.P) அவர்கள் 01.11.2007 வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் கோண்டாவில் கிழக்கு திரு.திருமதி Dr.இரத்தினசிங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தினி (ஆஸ்திரேலியா) அவர்களின் அன்புக்கணவரும், சண்ஜெயன் (ஆஸ்திரேலியா), பிரஜெயன் (ஆஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மநாதன், சண்முகநாதன், சறோஜினிதேவி (லண்டன்), சிவநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் 05.11.2007 திங்கட்கிழமை ஆஸ்ரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பத்மநாதன், சண்முகநாதன், சிவநாதன்**
(சகோதரர்கள்).

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (67567)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் வங்கி அச்சுவேலி கிளையினால் அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவர்களுக்கு சிசு உதான பரிசளிப்பு வைபவம் இடம்பெற்றது. இதில் அச்சுவேலி மக்கள்வங்கி உதவி முகாமையாளர் திருமதி. ஆர்.எம்.ஏ. தவநாயகம் உரையாற்றுவதையும், மேடையில் கல்லூரி அதிபர் வே. பாலசுப்பிரமணியம் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதை படத்தில் காணலாம்.



ஆனைக்கோட்டை கிராம மட்ட சிறுவர் பாதுகாப்பு குழு அலுவலகம் பியூட்டர் அறையினை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் நாடாவெட்டித் திறந்து வைப்பதையும், அருகில் ஆனைக்கோட்டை கிராமசேவையாளர் வை. சந்திரராசா, அப்பிரிவு விவசாய சம்மேளன தலைவர் மகாலிங்கம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.
(படம்: நவாலி செய்தியாளர்)

# ஆஸ்துமா நோய்க்குச் சிகிச்சை பெறுங்கள்...

அநேகமாக ஏன் இரண்டு விதமான மருந்துகள் பாவிக்கப்படுகின்றன?

ஏற்கனவே மேலே குறிப்பிடப்பட்டது போல சுவாசக் குழாயில அழற்சி ஏற்படும்போது சுரக்கப்படும் குறிப்பிட்ட ஊக்கப் பதார்த்தங்களால் (mediators), சுவாசக் குழாயில் மாற்றம் ஏற்பட்டுச் சுருக்கமடைகின்றது.

(1) வட்டத் தசைச் சுருக்கம்.

(2) உட்தோல் தடிப்படைதலும், அதிகளவு சளித்திரவம் சுரத்தலும்.

சல்பியூட்டமோல் (வென்ரோலின்) அல்லது ரேபூயூட்டலின் எனப்படும் மருந்தினால் வட்டத்தசைச் சுருக்கம் இலகுவில் நீங்குகின்றது. இருப்பினும் அது உட்தோல் தடிப்பையோ, சளித்திரவம் சுரப்பதையோ குறைவடையச் செய்யாது. குறிப்பாக இந்தச் Salbutamol அழற்சியைக் கட்டுப்படுத்துவதில்லை. வட்டத்தசைச் சுருக்கத்தையே சிறிதுநேரத்துக்கு தளர்த்தி வைத்திருக்கிறது.

இதனால் Salbutamol பாவித்து 10-15 நிமிடங்களில் மூச்சுத்திணறல் ஓரளவு குறைவடையும். எனினும் தோல்தடிப்பு, அதிக சளித்திரவம் சுரத்தல் என்பன சல்பியூட்டமேலுக்குக் கட்டுப்படாது அத்துடன் சல்பியூட்டமோல் இன் தொழிற்படும் கால எல்லை (4-6 மணித்தியாலயங்கள்) முடிவடைந்ததும் மீண்டும் தசைச்சுருக்கம் ஏற்படக்கூடும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களால், சுவாசக்குழாய் அழற்சியைத் தொடர்ந்து கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடிய மருந்தான Steroid கள் பாவிக்கப்படுகின்றன. இது அழற்சி ஏற்படும் தன்மையை மிகவும் அடி மட்டத்திற் குறைத்து வைத்திருக்க உதவுகின்றது. அதாவது அழற்சியைக் குறைப்பதால் சுவாசக் குழாயில் ஊக்கப் பதார்த்தங்கள் சுரக்கப்படுவதும் சளித்திரவம் மற்றும் உட்தோல் தடிப்படைவதும் தடுக்கப்படுகின்றது இதனால் நோயாளிக்கு அடிக்கடி சுவாசக்குழாய் அழற்சி ஏற்பட்டு மூச்சுத்திணறல் ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது.

அதனால் இந்த மருந்துகள் 'தடுப்பான்கள்' எனக் கூறப்படுகிறது Steroid inhaler இனைப் பாவிக்கும்போது அதன் தொழிற்பாடு ஆறுதலாகத்தான் தொடங்கும். ஆனால் ஒழுங்காகத் தேவையான மருந்தினைப் பாவிக்கும்போது 2-3 கிழமைகளின் பின்பு நோய் கட்டுப்பாட்டிற்கு கீழ் வருகின்றது.

இரண்டு வகை மருந்துகள் உபயோகித்தல், இரண்டு விதங்களில் பயன்படும்.

சுருக்கமாக Salbutamol மூச்சுக் கஷ்டம் ஏற்படும்போது விரைவாக மூச்சுக் கஷ்டத்தைக் குறைப்பதற்கும் (Relivers) மற்றும் Steroidகள் தொடர்ந்தும் அழற்சியை குறைத்து மீண்டும் மீண்டும் மூச்சுக் கஷ்டம் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் (Preventers) பாவிக்கப்படுகிறது

(1) Steroidகள் ஒழுங்காகக் காலையும் மாலையும் பாவிக்க வேண்டும்

(2) Salbutamol or Ventolin மூச்சுக் கஷ்டம் ஏற்பட்டால் மட்டும் பாவிக்க வேண்டும்

ஆஸ்துமா பற்றிய மேலதிகத் தகவல்களைப் பெறுவதற்கும்
உங்களுடைய ஆஸ்துமா நோய் பற்றி யாழ். போதனா வைத்தியசாலை
வைத்திய நிபுணர்களிடம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்
யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் 04.11.2007
ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும் கருத்தரங்கில்
கலந்துகொள்ளவும்.
சமுதாய மருத்துவத்துறை, மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

# ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சை நேர அட்டவணை

| திகதி | முற்பகல் | | நேரம் | பிற்பகல் | | நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 2007<br>டிசெம்பர் 10<br>திங்கள் | 46 ஆங்கில இலக்கியம்<br>47 சிங்கள இலக்கியம்<br>48 தமிழ் இலக்கியம்<br>49 அரபு இலக்கியம் | | 08.30 -11.30 | 70 வரலாறு | I, II | 12.30 -15.30 |
| 2007<br>டிசெம்பர் 11<br>செவ்வாய் | 21 சிங்கள மொழியும் இலக்கியமும்<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும்<br>21 சிங்கள மொழியும் இலக்கியமும்<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் | I<br>II | 08.30 - 09.30<br>09.45 - 11.45 | 21 சிங்கள மொழியும் இலக்கியமும்<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் | III | 12.30 - 14.30 |
| 2007<br>டிசெம்பர் 12<br>புதன் | 31 ஆங்கில மொழி | I<br>II | 08.30 - 09.30<br>09.45 - 11.45 | 11 பௌத்த சமயம்<br>12 சைவ சமயயம்<br>13 இந்து சமயம்<br>14 கத்தோலிக்க திருமறை<br>15 கிறிஸ்தவம்<br>16 இஸ்லாம் | I<br>II | 12.45 - 13.45<br>14.00 - 16.00 |
| 2007<br>டிசெம்பர் 13<br>வியாழன் | 32 கணிதம் | II | 08.30 - 11.30 | 32 கணிதம் | I | 12.30 - 13.30 |
| 2007<br>டிசெம்பர் 14<br>வெள்ளி | 62 சமஸ்கிருதம்<br>63 அரபு<br>67 இலத்தீன்<br>68 பிரெஞ்சு<br>69 மலாய்<br>75 ஹிந்தி<br>76 ஜப்பான்<br>77 ஜேர்மன்<br>73 சுகாதாரமும் உடற்கல்வியும் | I, II | 08.30 - 11.30 | 71 புவியியல் | I, II | 13.30 - 16.30 |
| 2007<br>டிசெம்பர் 15<br>சனி | 43 சமூகக் கல்வியும் வரலாறும் | II | 08.30 - 11.30 | 43 சமூகக் கல்வியும் வரலாறும்<br>92, 93, 94 தட்டெழுத்து தொகுதி | I<br>I | 12.30 - 13.30<br>14.00 - 16.00 |
| 2007<br>டிசெம்பர் 17<br>திங்கள் | 34 விஞ்ஞானமும்<br>தொழில்நுட்பவியலும் | II | 08.30 - 11.30 | 34 விஞ்ஞானமும்<br>தொழில்நுட்பவியலும்<br>51 சித்திரக்கலை | I<br>II | 12.30 - 13.30<br>14.00 - 16.00 |
| 2007<br>டிசெம்பர் 18<br>செவ்வாய் | தொழில்நுட்பப் பாடம்<br>35, 36, 37, 38, 39, 40,<br>78, 79, 80, 87, 88, 89, 90, 95,<br>96, 97, 98, 99<br>81 வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்<br>92, 93, 94 சுருக்கெழுத்து | I, II<br>II | 08.30 - 11.30<br>08.30 - 11.30<br>09.00 முதல் | தொழில்நுட்பப் பாடம்<br>81 வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்<br>92, 93, 94 தட்டெழுத்து தொகுதி | I<br>II | 12.30 - 13.30<br>14.00 - 16.00 |
| 2007<br>டிசெம்பர் 19<br>புதன் | அழகியல் பாடங்கள்<br>51 சித்திரம்<br>52 நடனம்(சிங்களம்)<br>53 பரதநாட்டியம்<br>54 சங்கீதம்(சிங்களம்/கீழைத்தேயம்)<br>55 சங்கீதம்(கர்நாடகம்)<br>56 சங்கீதம்(மேலைத்தேயம்)<br>57 நாடகமும் அரங்கியலும் | I,III<br>I, II | 08.30 - 09.30<br>09.45 - 11.45<br>08.30 - 11.30 | 74 தகவல் தொழில்நுட்பக் கல்வி | I, II | 12.30 - 15.30 |
| 2007<br>டிசெம்பர் 20<br>வியாழன் | 72 அபிவிருத்திக் கல்வி | I, II | 08.30 - 11.30 | 61 பாளி<br>இரண்டாம் மொழி<br>64 சிங்களம்<br>65 தமிழ் | I, II | 12.30 - 15.30<br>12.30 - 15.30 |

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.3

சாவகச்சேரி நகரசபை பொது நூல் நிலைய மீசாலை கிளையினர் தேசியவாசிப்பு மாதத்தையொட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை முன்பள்ளிச் சிறார்களிடையே போட்டிகளை நடத்தவுள்ளனர்.

மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய மைதானத்தில் போட்டிகள் நடைபெறுமென நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறவித்துள்ளார்.

* * *

வடமராட்சி, நவ.3

பருத்தித்துறை பிரதேச சபையின் உள்ளுராட்சி வார இறுதி நாள் விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பருத்தித்துறை திக்கம் கலாசார மண்டபத்தில் பிரதேச சபைச் செயலாளர் எஸ்,பசுபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராகவும் மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, மேலதிக அரசாங்க அதிபர் (சுனாமி) பி.செந்தில்நந்தனன், யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி.எம். வசந்தகுமார், யாழ்.செயலகத் திட்டப் பணிப்பாளர் எம்.பிரதீபன், யாழ். மாநகர ஆணையாளர் எம்.எஸ்.சரவணபவ, பிரதேச செயலர்களான ஆர்.வரதீஸ்வரன், எஸ்.சத்தியசீலன், எம்.ஸ்ரீஸ்கந்தகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (203-160-78)

* * *

தென்மராட்சி, நவ.3

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

மாகாண கல்வித் திணைக்கள அலுவலர்கள் செயலமர்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

1ஏ.பி, 1 சி பாடசாலைகளின் ஈ.எவ்.பி வேலைத்திட்டத்திற்கு பொறுப்பான ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.(203-207)

* * *

யாழ்ப்பாணம், நவ.3

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்தியமகா வித்தியாலயத்திலிருந்து தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை (மு.ப. 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆரம்ப பாடசாலையின் பகுதித் தலைவர் செல்வி சுபத்திரா இராஜசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் கலந்து கொள்வார். (203-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

ஐம்பத்து இரண்டாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு



மலர்வு 02.01.1908 | மலர்வு 19.04.1915

உதிர்வு 28.08.1955 | உதிர்வு 26.10.2005



அமரர் வல்லிபுரம் தாமோதரம்பிள்ளை (தபாலதிபர்)

திருமதி இரத்தினம்மா தாமோதரம்பிள்ளை (திதி: ஐப்பசி அபரநவமி 03.11.2007)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தா.ஸ்ரீபால,
461, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (67539)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மக்கள்பாவனைக்கு குழாய்க்கிணறு

பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்க முன்றலில் பொது மக்கள் நலன் கருதிக் குழாய்கிணறு ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இவ் வருட பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவனேசன் ஒதுக்கீடு செய்த நிதியைக் கொண்டு இந்தக் குழாய் கிணறு நிறுவும்பணி நடைபெற்று வருவதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(203-135)


## விமானப் பொதிகள் சேவை

உங்கள் பொருள்களை யாழ்.- கொழும்பு அல்லது கொழும்பு - யாழ். தினசரி விமானம் மூலமாக உடனுக்குடன் உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும். உங்களுக்குத் தேவையான பொருள்களைக் கொழும்பில் கொள்வனவு செய்து அனுப்பிவைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்து தரப்படும். அத்துடன் பூதவுடல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். தேவை ஏற்படின் விமானம் சாட்டற் (Charted) செய்து கொடுக்கப்படும்.

| கொழும்பு - யாழ். | SUB DEALERS | யாழ். - கொழும்பு |
|---|---|---|
| 1Kg 250/= | தேவை | 1Kg 200/= |

EURO GROUP OF COMPANIES

35, STATION RD., MOUNT LAVINIA. TEL.0113846998, 0114542190, FAX: 0114542360.
WELLAWATTE BRANCH: 11, VIHARA LANE, COL-06.
TEL: 0114969116, 0773661891.
JAFFNA BRANCH: 22,WYMAN RD.
TEL: 0212223974, 0774207963 (C54198)


# நெஞ்சகலாத நினைவஞ்சலி

47ஆம் ஆண்டு | 17ஆம் ஆண்டு | முதலாம் ஆண்டு







அமரர் நாகலிங்கம் திருஞானசம்பந்தர்
(முன்னாள் ஆசிரியர், மீசாலை வீரசிங்கம் சைவவித்தியாசாலை)
தோற்றம் 22.07.1913
மறைவு 02.07.1960

திருமதி திருஞானசம்பந்தர் யோகாம்பிகை
(இளைப்பாறிய ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)
தோற்றம் 23.08.1920
மறைவு 01.07.1990

சங்கீதரத்னம் திருமதி மதுரவசனி
தோற்றம் 10.11.1951
மறைவு 13.11.2006

திதி 03.11.2007

எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காத நினைவுகளுடன் ....

மீசாலை. (67537) குடும்பத்தினர்.

# யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம் பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் தரம் 5 - 2007 புலமைப் பரிசில் பரீட்சையில்


இ.பிரவினா 176 புள்ளிகள்


அ.அனித்துஷா 166 புள்ளிகள்


து.லஜிபன் 161 புள்ளிகள்


நி.பிரியங்கா 159 புள்ளிகள்


க.தனுசாந்த் 157 புள்ளிகள்


ரா.பிரதீப்ராஜ் 153 புள்ளிகள்


சா.தனுஷா 149 புள்ளிகள்


க.வாரணன் 143 புள்ளிகள்


ச.ஜனனி 142 புள்ளிகள்


த.யதீசன் 140 புள்ளிகள்

ஆகிய புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டுவதோடு

| | | | |
|---|---|---|---|
| கே.சண்முகாயினி | 138 புள்ளிகள் | வி.விதுசன் | 138 புள்ளிகள் |
| வ.யட்சாயினி | 137 புள்ளிகள் | ம.மதுர்சன் | 134 புள்ளிகள் |
| ஸ்ரீ.சிந்துர்ஜன் | 132 புள்ளிகள் | நி.நிருஷன் | 131 புள்ளிகள் |
| க.சங்கவி | 130 புள்ளிகள் | | |

ஆகிய மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற ஏனைய 22 மாணவர்களையும் வாழ்த்துவதோடு அவர்களை சித்தியை நோக்கி வழி நடத்திய அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றி கலந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
(67504) யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 30 . 04 . 1930

ஆண்டவன் அடியில் 04 . 10 . 2007

## திருமதி நல்லதம்பி புஸ்பராசு

அன்பின் பிறப்பிடமாய்
ஆசையின் உறைவிடமாய்
இல்லத்து அரசியாய்- எமை
ஈன்ற அன்னையே!
ஊரார் போற்றிட
ஏணியாய் நின்று உயர்ந்திட்ட
ஒப்பற்ற தாயே!
மாதம் ஒன்றாகி விட்டது
நீ மறைந்து
ஆறாத் துயர்தனில் - உம்
ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னையின் திடீர் மறைவுச் செய்தியறிந்து தொலைபேசி மூலமும் இல்லத்தில் நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்தும் துயர்பகிர்ந்தோருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.
(67449)

தகவல்:
இ. புவனேஸ்வரி (கிளி- மகள்).


## COMPUTER EXPRESS

Institute of Information Technology
#15, Sirambiyadi Lane, Jaffna. 0212228250
Branch : #167, Kasthuriyar Rd, Jaffna. 0777222422

யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்.

### Diploma in Hardware Engineering

உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை பெற சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற.

Course Contents :-
- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & DOS
- கம்பியூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்
- Mother Board, processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்.
- கம்பியூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம். (BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்.
- Software, Operating system இன்ஸ்ரோல் செய்தல்.
- கம்பியூட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்தல்.

Hardware பயிற்சி.
- கணனிப் பாகங்களை இணைக்கும் முறை.
- Assembling
- BIOS Configurations (முறைப்படுத்தல்)
- Hard Disk இனை முறைப்படுத்தல் (Partition & Formatting)
- Network தொடர்பான அறிமுகம்
- Trouble Shooting & Maintenance.

Software பயிற்சி.
- Operating System நிறுவும் முறை (Windows 98 & Windows XP)
- Software Install செய்யும் முறை
- Driver Installation செய்யும் முறை. (Sound Card, Modem, VGA, TV Card, Printer)
- Trouble Shooting (File updating, Copying)

Course Fee :- 2000/=
வகுப்புக்கள் ஆரம்பம்
05/11/2007

### Diploma in Computerized Accounting

ACCPAC + Quickbooks premier + MYOB

ஆகிய முன்னணி Accounting Software அனைத்ினூடாகவும் கற்பிக்கப்படும்.

### Diploma in Vedio Editing

வகுப்புக்கள் ஆரம்பம் 05/11/2007

Adobe Photoshop, Adobe Premier, Pinnacle Studio, VCD Cutter, Cool 3D Studio, 3D Albam ஆகிய முன்னணி Software கள் ஊடாக........... 3,000/


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி: 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

## ஐ.நா.அதிகாரிகளின் கருத்துகளும் அவற்றைப் புறமொதுக்கும் அரசும்

''இலங்கையில் நிலைமை மிகவும் மோசமடைந்து வருகின்றது. அதனால் விரைந்து செயற்படுங்கள். உடனடியாக நடவடிக்கை ஏதும் எடுங்கள்.''

- இப்படி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்குழுவையும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலையும் வலியுறுத்திக் கேட்டிருக்கின்றார் சட்டவிரோத மற்றும் கண்மூடித்தனமான படுகொலைகள் தொடர்பான ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் பிலிப் அல்ஸ்டன்.

உலகில் மனித உரிமைகள் பேணப்படும் நிலைமை குறித்து ஆராயும் ஐ.நா. பொதுச்சபைக் கமிட்டியின் முன் உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு கோரியிருக்கின்றார்.

இலங்கையில் மனித உரிமை நிலைமைகளை அவதானிப்பதற்கான ஐ.நா.கண்காணிப்பு அமைப்பு ஒன்று அங்கு நேரடியாகப் பிரசன்னமாகியிருக்குமானால், அந்நாட்டின் மனித உரிமை மீறல்கள் கணிசமாகக் குறைவடைந்திருக்கும் என்று தாம் கருதுகின்றார் எனவும் அவரும் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையில் நிலைமை சீர்கெட்டு, நெருக்கடி முற்றும் சூழ்நிலை தென்படுவதால் இவ்விவகாரம் குறித்து கவனமும், சிரத்தையும் எடுக்க வேண்டியது அவசியம் எனக் கடந்த வருடமே தாம் மேற்படி ஐ.நா.பொதுச்சபைக் குழுவுக்கு முற்கூட்டிய அபாய அறிவிப்பு விடுத்திருந்தமையும், தாம் கூறியபடியே இப்போது நிலைமை இலங்கையில் மிக மோசமடைந்திருப்பதால் ஐ.நா. பொதுச்சபையும், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலும் விரைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கும் வேளை வந்துவிட்டது என்றும் அவர் அங்கு கூறியிருக்கின்றார்.

அண்மைக்காலத்தில் இலங்கைக்கு வந்து சென்ற - இலங்கை விவகாரத்தைக் கையாளுகின்ற - ஐ.நாவின் அனைத்து அதிகாரிகளுமே இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை குறித்து விசனமும் கவலையுமே வெளியிட்டு வருகின்றனர். ஆனால் இலங்கை அரச நிர்வாகம் திருந்துவதாகவோ, தன்னை நேர்சீர்படுத்துவதாகவோ தெரியவில்லை.

ஆயுதப் பிணக்கில் சிக்கியுள்ள சிறுவர்கள் தொடர்பான விடயங்களில் ஐ.நா. செயலரின் விசேட பிரதிநிதியின் தூதுவராகட்டும் -

அவசர மனிதாபிமானப் பணிகளுக்கான ஐ.நாவின் கீழ் நிலைச் செயலாளராகட்டும் -

மனித உரிமைகளுக்கான ஐ.நா. தூதுவராகட்டும் -

சித்திரவதைகளைக் கண்காணிப்பதற்கான ஐ.நாவின் விசேட இணைப்பாளராகட்டும் -

இப்போது, சட்டவிரோத மற்றும் கண்மூடித்தனமான படுகொலைகளை ஆராயும் ஐ.நா.அறிக்கையாளராகட்டும் -

அனைவருமே இலங்கைத் தரப்பின் உண்மை நிலையைப் புட்டுப்புட்டு வைக்கத் தவறவில்லை.

*''தனது துணைப் படைகளோடு சேர்ந்து அரசுப் படைகள் சிறுவர்களைப் படைக்குப் பலவந்தமாகத் திரட்டுகின்றன. மனிதாபிமானத் தொண்டுப் பணியாளர்கள் கடமையாற்றுவதற்கு உலகிலேயே மிக மோசமான - ஆபத்தான - பிரதேசம் இலங்கைதான். இலங்கையில் ஆட்கடத்தல்கள், காணாமற்போகச் செய்தல், கப்பம் அறவிடல், படுகொலைகள் என்பன மலிந்து சட்டத்தின் ஆட்சி வலுவிழந்துவிட்டது. 'பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை' என்ற பெயரில் அரசுப் படைகளும் பொலிஸாரும் அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக நாடு முழுவதும் இழைக்கும் கொடுமைகள், சித்திரவதைகள் எல்லை மீறிவிட்டன. மொத்தத்தில் ஐ.நா. விரைந்து தலையிட வேண்டிய மிக மோசமான கட்டத்தை இலங்கை அடைந்துள்ளது.''*

- இதுவே ஐ.நாவின் உயரதிகாரிகள் பலரும் பகிரங்கமாக வெளியிட்டுவரும் கருத்துகளின் தொகுப்பாகும்.

ஆனால் இலங்கைத் தரப்போ - கொழும்பு அரசோ - இவ்விடயங்கள் குறித்து பெரிதாக அலட்டிக்கொள்வதாகத் தெரியவில்லை.

'ஐ.நா. சொல்வதைச் சொல்லிவிட்டுப் போகட்டும். நாம் செய்வதையே தொடர்ந்தும் செய்வோம். ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் அங்கத்துவ நாடுகளின் ஆதரவு எமக்கு இருக்கும் வரை ஐ.நா. அதிகாரிகள் எப்படித் தலைகீழாகக் குதித்தாலும் எங்களை ஒன்றும் செய்து விட முடியாது. இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தீர்மானம் எதுவும் நிறைவேற்ற முடியாது. அப்படித் தீர்மானம் நிறைவேற்றாத வரை இவ்விடயத்தை ஐ.நா. பொதுச்சபைக்குக் கொண்டு போக முடியாது. ஆகவே ஐ.நா. உயரதிகாரிகள் எப்படிக் குதித்தாலும் இவ்விடயத்தில் இலங்கையை ஒன்றுமே செய்துவிடவே முடியாது' - என்ற மிதப்பில், தினவெடுத்து, மென்மேலும் மனித உரிமை மீறல்களுக்கு வழிசெய்து நிற்கின்றது இலங்கை.

உண்மைதான். 48 அங்கத்தவர்களைக் கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் 26 இடங்கள் ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கு. இவை எல்லாமே - பெரும்பாலும் அநேகமான நாடுகள் - தத்தமது பிரதேசங்களில் மோசமான மனித உரிமை மீறல்களுக்காகக் குற்றச்சாட்டுக்கு இலக்கானவை. இதன் காரணமாக இந்த நாடுகளில் ஒன்றுக்கு எதிரான மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுகள் கவுன்ஸிலில் எழுப்பப்படும் போது இந்த நாடுகள் அனைத்தும் அவற்றை எதிர்ப்பதில் ஒன்றுபட்டு நிற்பது வழமை. அந்த ஒற்றுமை காரணமாகவே, இப்போது இலங்கையில் மனித உரிமை அத்துமீறல்களுக்காக இலங்கை மீது ஐ.நா. அதிகாரிகள் 'பாயும்'போது இலங்கையைக் காப்பாற்ற முயல்கின்றன அதன் சகோதர அங்கத்துவ நாடுகள்.

இப்படி முறையற்ற விதத்தில் - நீதி, நியாயமின்றி - ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகள் நடந்து கொண்டால், ஐ.நா. பொதுச்சபையின் மூன்றாவது கவுன்ஸில் கூட்டத்துக்கு ஏதேனும் ஒரு தனி நாடு இவ்விடயத்தை தனிப் பிரேரணையாகக் கொண்டு வந்து ஆராயமுடியும். அதன் மூலம் இலங்கை நிலைமையை பகிரங்க விவாதத்துக்கும் வெளிச்சத்துக்கும் கொண்டு வரமுடியும். அத்தோடு மூன்றாவது கவுன்ஸிலின் செயற்றிறன் அடங்கிவிடும். அதற்குமேல், அந்த மூன்றாவது கவுன்ஸில் கூட்டத்தின் ஊடாக அங்கத்துவ நாடு ஒன்றுக்கு எதிராகக் காத்திரமான நடவடிக்கை ஏதும் எடுப்பதற்கு ஐ.நா. ஒழுங்கு முறையில் இடமில்லை.

ஆகவே, மோசமடைந்துவரும் இலங்கை நிலைமையை சீரடைய வைப்பதற்கு, இப்போது அதிகாரிகள் மட்டத்தில் வெளியிடப்படும் கண்டனங்கள், அறிவிப்புகள், விமர்சனங்கள் ஆகியவற்றுக்கு அப்பால் ஏதேனும் ஐ.நா. செய்தாக வேண்டும். அது அவசர, அவசிய விவகாரமாகும். அதற்கு வழி எது என்பதுதான் இன்றைய கேள்வியாகும்.

# குடாநாட்டில் உள்ள விடுதலைப் புலிகளை சரணடையுமாறு கோருகிறது இராணுவம்

யாழ்ப்பாணம், நவ.03

குடாநாட்டில் உள்ள, விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களைச் சரண் அடையுமாறு பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் கோரியுள்ளது.

''தெளிவான நாளைய தினத்தைக் காண இன்றே ஆயுதங்களைக் களைவோம்'' என்ற தலைப்பில் தலைமையகம் நேற்றிரவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

விடுதலைப் புலிகளின் உறுப்பினராகி, உங்கள் தலைவர்களுக்கு நிர்வகிப்பதற்கான ஈழ இராச்சியத்தை வென்று கொடுப்பதற்காக, உங்கள் வாழ்வை இன்னல்களுக்கு உள்ளாக்கி இருக்கின்றீர்கள்.

நீங்கள் எதிர்பார்க்கும் ஈழ இராச்சியம் உங்களுக்கு மதிப்பளிக்குமா? உங்கள் உறவினர்களுக்கு மதிப்பளிக்குமா?

ஈழத்தை அடையமுன்னரே உங்களால் அல்லது உங்கள் உறவினர்களால் இழைக்கப்படும் தவறுக்குக்கூட உங்கள் தலைவர்களால் விதிக்கப்படும் தண்டனையானது எவ்வளவு பயங்கரமானது.

உங்கள் உயிர் தியாகத்தின் ஊடாக அச்சத்தையும் கலவரத்தையும் உடைய நிச்சயமற்ற வாழ்வைக்கொண்ட பூமியை உங்களுக்கும் உங்கள் உறவுகளுக்கும் நிர்மானித்துக் கொடுப்பதற்காகவா?

இதனை நீங்கள் விளங்கிக் கொள்ளாமல் இருப்பினும் அரசாங்கமும் பாதுகாப்புப் படையினரும் நன்கு உணர்ந்துள்ளனர். ஆகவேதான் நாங்கள் உங்கள் உறவுகளுக்கு தெளிவான புது வாழ்வுக்காக நாளுக்குநாள் கிராமங்களை மீட்டெடுத்து வருகின்றோம்.

நீங்கள் தொடர்ந்தும் இயக்கத்தில் தரித்திருந்து உங்கள் உறவுகளுக்கு அழிவை ஏற்படுத்த முயற்சிக்காதீர்கள். உங்கள் ஆயுதங்களை களைந்துவிட்டு பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்து உங்களினதும் உங்கள் உறவுகளினதும் எதிர்க்காலத்தை அர்த்தமுள்ளதாக்க செயற்படுங்கள். சரணடையும் உங்கள் பாதுகாப்பிற்கு, யாழ். பாதுகாப்புப் படைகளின் தளபதி தனிப்பட்ட முறையில் முழு உத்தரவாதமளிப்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

நீங்கள் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்த பின்னர் நாம் உங்கள் இரகசியத் தன்மையை பாதுகாப்பதுடன் உங்களுக்கு தொழில் பயிற்சிகளை வழங்கி உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்து சிறந்த எதிர்காலத்தை உருவாக்கித் தர வழி வகுக்கின்றோம் - என்றுள்ளது. (அ-1)

# 6 அங்கத்தவர் கொண்ட குடும்பம் ஆணைக்குழுவில் நேற்றுச் சரண்!

யாழ்ப்பாணம், நவ. 03

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து 6 அங்கத்தவர்களைக் கொண்ட இளம் குடும்பம் ஒன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்றுச் சரண் அடைந்தது.

கெருடாவில், சாவகச்சேரியைச் சேர்ந்த இந்தக் குடும்பத்துக்கு இனந்தெரியாதோரால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் காரணமாகவே இவர்கள் சரணடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகப்பன் (வயது - 37), தாய் (வயது - 27) மற்றும் 13, 8, 3, 2 வயதுகளை உடைய பெண்பிள்ளைகளைக் கொண்ட இந்தக் குடும்பத்தைப் பாதுகாப்பாகத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

### அளவெட்டியில் இளைஞன் கடத்தல்

இதேவேளை -

இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அளவெட்டி மேற்கைச் சேர்ந்த கணேசன் சுரேஸ் (வயது - 22) என்ற இளைஞரே கடந்த 31ஆம் திகதி கடத்தப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரவு வீட்டில் இருந்த அவரை மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த ஆயுததாரிகள் கடத்திச் சென்றதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-50)

# அரசியல் பொறுப்பாளராக தமிழ்ச்செல்வன் பதின்நான்கு ஆண்டுகள் பணி புரிந்தவர்

கிளிநொச்சி ,நவ.03

நாற்பது வயதாகும் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் (பிறந்த திகதி 29.08.1967) கடந்த 14 வருடங்களாகப் புலிகளின் அரசியல் பொறுப்பாளராகப் பணிபுரிந்து வருகின்றார்.

இந்திய அமைதி காக்கும் படைக்கும் இலங்கைப் படைக்கும் எதிராகப் பல்வேறு துணிகரத் தாக்குதல்களை அவர் முன்னின்று நடத்தியிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமது பதினேழாவது வயதில் அவர் இயக்கத்தில் இணைந்து கொண்டார்.

தமிழகத்தில் புலிகளிகளின் ஐந்தாவது பயிற்சி முகாமில் பயிற்சி பெற்ற அவர், தமிழகத்தில் தலைவர் பிரபாகரனின் தனிப்பட்ட இணைப்பாளராகப் பணியாற்றினார்.

1986இல் தலைவர் பிரபாகரன் தமிழகத்திலிருந்து தாயகம் வருவதற்கு முன் தாயகத்துக்கு வந்து கள நிலைமைகள் பற்றிய தகவல்களைத் திரட்டி மீளவும் தமிழகம் சென்று திரும்பவும் தலைவருடன் சு.ப.தமிழ்ச்செல்வன் தாயகம் திரும்பினார். அப்போது விடுதலைப் புலிகள் அமைப்பில் அவரின் பெயர் தினேஷ் என்பதாகும்.

1987 மே மாதம் யாழ். தென்மராட்சி கோட்டப் பொறுப்பாளராக அவர் நியமிக்கப்பட்டார். 1991 வரை அப்பதவியில் அவர் நீடித்தார். இந்தியப் படைகளுக்கு எதிரான போரில் தென்மராட்சியில் நின்று தாக்குதல் நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார்.

1991 இல் யாழ். மாவட்ட சிறப்புத் தளபதியாக செயற்பட்டார்.

1993 இல் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் என்ற நிலையை அவர் பெற்று கடைசிவரை அந்தப் பொறுப்பில் இருந்தார்.

1994 - 1995 இல் சந்திரிகா அரசுடனான அமைதிப்பேச்சில் விடுதலைப் புலிகளின் அணிக்கு தமிழ்ச்செல்வன் தலைமை வகித்தார்.

2002 ஆம் ஆண்டு நோர்வே அனுசரணையிலான பேச்சுக்குழுவில் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்துடன் இருந்து பின்னர் பேச்சுக் குழுவின் தலைமைப் பணியை செய்துவந்தார்.

அமைதிப் பேச்சுகளில் வெளிநாடுகளின் முதன்மைப் பிரதிநிதிகளுடன் சந்திப்புகளை மேற்கொண்டு இலங்கை அரசின் அமைதிப் பேச்சுகளின் உண்மை முகத்தை வெளிப்படுத்தியவர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

1991 இல் ஆனையிறவு முகாம் மீதான ஆகாய கடல்வெளித் தாக்குதல் நடவடிக்கையிலும் -

1992 இல் ஸ்ரீலங்கா படையினரின் 'பலவேகய - 02' எதிர்ச்சமரிலும் - அவர் முன்னின்று செயற்பட்டார்.

தச்சன்காடு அரச படை முகாம் மீதான தாக்குதல், காரைநகரில் படையினர் மீதான தாக்குதல் ஆகியவற்றிலும் சு.ப. தமிழ்ச்செல்வன் முதன்மைப் பங்காற்றினார்.

1991 இல் மன்னார் சிலாபத்துறை ஸ்ரீலங்காப் படைத்தளம் மீதான தாக்குதலுக்கு அவர் தளபதியாக செயற்பட்டார்.

ஆகாய கடல்வெளிச் சமரில் அவர் விழுப்புண்பட்டார். பூநகரி ஸ்ரீலங்கா படைத்தளம் மீதான 'தவளைப் பாய்ச்சல்' நடவடிக்கையில் பங்காற்றிய அவர் தன்னுடைய காலில் விழுப்புண்பட்டார்.

'ஓயாத அலைகள் - 03' நடவடிக்கையில் தென்மராட்சி தனங்கிளப்பு ஸ்ரீலங்கா படைத்தளம் அழிப்பு உள்ளிட்ட தென்மராட்சிப் பகுதி மீட்புத்தாக்குதலில் கட்டளைத் தளபதியாக அவர் பங்காற்றினார்.

தன்னுடைய அரசியல் பணி மூலம் தமிழ் மக்கள் மனதில் நிறைந்தவராக சு.ப.தமிழ்ச்செல்வன் விளங்கினார்.

தாயகத்திலும் புலம்பெயர் தமிழ்மக்கள் மத்தியிலும் தமிழ்நாட்டிலும் அன்பையும் மதிப்பையும் பெற்றிருந்தார். (சி)

# மன்னார் கடற்படுகையில் 8 இடங்களில் எண்ணெய் வள ஆய்வு

## *2010 இல் உற்பத்தி சாத்தியமாகுமாம்*

கொழும்பு, நவ. 03

மன்னார் கடற்படுகையில் எண்ணெய் வள ஆய்வுக்கும் பின்னர் எண்ணெய் உற்பத்திக்குமென எட்டு இடங்களை அரசாங்கம் ஆய்வு நிறுவனங்களுக்கு ஒதுக்கிக் கொடுக்க உள்ளது.

இலங்கையில் எண்ணெய் வள ஆய்வில் ஈடுபடுவதற்கு பல கட்டார் நிறுவனங்கள் ஆர்வம் காட்டியிருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

இத்தகவல்களை பெற்றோலிய பொருள்கள் அபிவிருத்தி அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி பத்திரிகையாளர்களிடம் நேற்றுமுன்தினம் கட்டாரில் வைத்துத் தெரிவித்தார்.

கடந்த 2002ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி மன்னார்ப் படுகையில் ஒரு பில்லியன் பரல் மசகு எண்ணெய் உற்பத்திசெய்யும் வாய்ப்பு இருப்பது தெரியவந்துள்ளது. மன்னாரிலிருந்து களுத்துறை வரையில் 35 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் எண்ணெய் வள [illegible] தாகக் கருதப்படுகின்றது.

எண்ணெய் வள ஆய்வுக்கான இடத் தொகுதிகள் இரண்டு ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டன. திட்டமிட்டவாறு செயல் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டால் 2010 ஆம் ஆண்டளவில் மன்னார் படுகையிலிருந்து இலங்கை அதன் முதல் எண்ணெய் பிப்பாவை உற்பத்திசெய்யும் என்று அமைச்சர் நம்புகின்றார். (அ-ப)

# திருமுறை விழா

சுழிபுரம், நவ. 03

சங்கானைக் கல்விக் கோட்டம் நடத்தும் சைவத்திருமுறை விழாவும் சைவநெறித்தொண்டு செயல் நிகழ்வுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சங்கானை அ.மி.த.க. பாடசாலையில் இடம்பெறவுள்ளன.

சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் து.எங்கரசு தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வாழ்த்துரைகளை வலிகாமம் வலயக் கல்விப்பணிப் [illegible]க்னேஸ்வரன், சங்கானை பிரதேசசெயலர் திருமதி தேவநந்தினி பாபு ஆகியோர் வழங்குவர்.

(1-28-203)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி - 18 | ஞாயிற்றுக்கிழமை 04.11.2007 |
| திதி : தசமி | முன்னிரவு: 08.52 |
| நட்சத்திரம் : | மகம் |
| | பிற்பகல் : 12.52 |
| சுபநேரம் | : 09.04 - 10.34 |
| ராகுகாலம் | : 04.34 - 06.04 |

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி தேவாலயப் பகுதியில் விமானப் படை அதிகாலைக் குண்டுவீச்சு

## இருவர் பலி; ஐவர் காயமுற்றனர்

கிளிநொச்சி, நவ. 03

கிளிநொச்சி நகரத்தில், 155ஆம் கட்டையில் உள்ள அந்தோனியார் தேவாலயத்தை அண்டிய குடியிருப்புப் பகுதிகள் மீது விமானப் படையின் மிக் - 27 ரக விமானங்கள் நடத்திய வான் தாக்குதலில் பொதுமக்கள் இருவர் பலியாகினர். 4 மாதக் குழந்தை உட்பட ஐவர் காயமுற்றனர்.

நேற்றுக்காலை 6 மணிக்கும் 6.20 மணிக்கும் இடையில் அடுத்தடுத்து வந்த விமானங்கள் தேவாலயத்துக்கு அருகே உள்ள குடியிருப்புகள் மீது குண்டுகள் வீசின.

இத்தாக்குதலின் போது வீடு ஒன்றின் மீது குண்டு விழ்ந்து வெடித்தது. அது முற்றாக உடைந்து அழிந்தது. அவ்வீட்டிலிருந்த இராசதுரை நிருமலசிங்கன் (வயது - 21) என்பவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். மற்றொருவரும் மரணமானார்.

விமானத் தாக்குதலின் காயமுற்றோர் விவரம் வரு மாறு:

ரவீந்திரன் பாலகுமாரி (வயது - 34), இமானுவேல் ரவீந்திரன் (வயது - 24), ஜெயரூபன் கவிப்பிரியா (4மாத குழந்தை), நடராசா தெய்வானை (வயது - 75), சுப்பிரமணியம் நாகேஸ்வரி (வயது - 78).

இதனிடையே இரணைமடுப் பகுதியில் சிறிலங்கா வான்படையின் விமானங்கள் நடத்திய குண்டுவீச்சில் ஒருவர் காயமடைந்தார். (அ)

---

### கருணா நேற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போலி பாஸ்போட்டுடன் நடமாடியமைக்காக இவரும் மற்றும் இவரது உதவியாளரும் கைது செய்யப்பட்டனர் என்பதை பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு உறுதிப்படுத்தியது என ஊடகத் தகவல்கள் தெரிவித்தன.

அவர் விரைவில் நாடு கடத்தப்பட வாய்ப்புகள் இருப்பதாகவும் கூறப்பட்டது.

---

### இது புலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற செய்தியையும் -

நாம் நினைத்தால் அவர்கள் ஒவ்வொருவரையும் வரிசையாகத் தொலைத் துக்கட்ட முடியும் என்பதையும் -

இந்த நடவடிக்கை மூலம் நாம் புலிகளின் தலைமைக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றோம்'' - என்றும் கோத்தபாய மேலும் தெரிவித்திருக்கின்றார். (சி)

---

### புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசத் தொடர்பாடல் நிலையக் கட்டடம் அழிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இத்தாக்குதலில் அந்த அமைப்பின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் உட்பட ஆறு முக்கியஸ்தர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதல் நடைபெற்ற சமயம் விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் உள்ளிட்ட 50 பேர் அங்கு இருந்ததாக புலனாய்வுத் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம்கள் மற்றும் அந்த அமைப்பின் தலைவர்கள் ஒன்று கூடும் இடங்களை இலக்குவைத்து தாக்குதல்கள் தொடரும்.

நீண்ட காலமாகச் சேகரிக்கப்பட்ட புலனாய்வுத் தகவல்கள் மற்றும் விமானக் கண்காணிப்புக்களின் உதவுயுடன் இத்தாக்குதல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார் விமானப் படையின் பேச்சாளர் குறூப் கப்டன் அஜந்தா சில்வா.

**தகவல் அறிந்தே தாக்குதல்**

இதேவேளை -

விமானப் படையினரின் தாக்குதல் வெற்றிகரமாக அமைந்தது.

கிளிநொச்சிப் பகுதியில் குறிப்பிட்ட ஓர் இடத்தில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் நடமாடுவதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையிலேய நேற்றுக்காலை விமாத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நானயக்கார தெரிவித்தார். (அ-1)

---

### தமிழ்ச்செல்வனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சிக்கு பெரியார் திராவிடர் கழக நிர்வாகி டைகர் பாலன் தலைமை வகித்தார்.

ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், தமிழ்நாடு மனித உரிமைக் கழகம், புதியன பண்பாட்டுக்கழகம், குடியுரிமை பாது காப்பு நடுவம், தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சி, மார்க்சிய பெரியாரிய பொதுவுடமைக் கட்சி, தலித் மக்கள் இயக்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்களின் நிர்வாகிகள் இவற்றில் பங்குபற்றினர்.

**கோவையில்**

கோவை காந்திபுரத்தில் உள்ள பெரியார் திராவிடர் கழக அலுவலகமான பெரியார் படிப்பகத்தின் முன்பாக நேற்று மாலை 5 மணிக்கு நடைபெற்ற நிகழ்வுக்கு பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கோவை கு.இராமகிருட்டினன் தலைமை வகித்தார்.

இந்நிகழ்வில் பெரியார் திராவிடர் கழகத்தின் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள் வெ.ஆறுச்சாமி, நிர்வாகிககள் , தமிழின உணர்வாளர்கள் பலரும் பங்கேற்று வீரவணக்கம் செலுத்தினர்.

பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் வகையில் பெரியார் திராவிடர் கழகத்தின் கொடி அரைக்கம்பத்தில் நேற்றுப் பறக்கவிடப்பட்டது. (சி)

---

### விமானக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு அருகில் உள்ள வீடொன்றின் மீது முதல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் சிவிலியன் கள் இருவர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து மீண்டும் வான்பரப்பினுள் வந்த குண்டு வீச்சு விமானங்கள் இரண்டாவது தடவையாக நடத்திய குண்டுத் தாக்குதலின்போதே விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் தமிழ்ச் செல்வனும் ஏனையோரும் கொல்லப்பட்டனர் என நம்பப்படுகின்றது.

வான்குண்டுத் தாக்குதலில் தமிழ்ச்செல்வனின் உடலில் நேரடியான - பெரிய - காயம் ஏதும் ஏற்படவில்லை என்றும் -

விமானக்குண்டு வெடிப்பு ஏற்படுத்திய திடீர்ப் பேரமுக்கமும், அதிர்ச்சியுமே அவரது மரணத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்றும் -

கிளிநொச்சித் தகவல்கள் தெரிவித்தன.

தமிழ்ச்செல்வன் மற்றும் ஐந்து போராளிகளின் மறைவையொட்டி இன்றும், நாளையும்,நாளை மறுதினமும் என மூன்று நாட்களுக்குத் தேசிய துக்கதினம் அனுஷ்டிக்க விடுதலைப் புலிகள் அமைப்பு கோரியிருக்கின்றது.

பிரிகேடியர் தமிழ்ச்செல்வனின் பூதவுடல் விடுதலைப் புலிகளின் புலிக்கொடி போர்க்கப்பட்ட நிலையில் நேற்றுப் பிற்பகல் அவரது கிளிநொச்சி இல்லத்தில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்தது.

தமிழ்ச்செல்வன் தனது துணைவியாரையும் எட்டு வயது மகள் மற்றும் நான்கு வயது மகன் ஆகியோரையும் விட்டுப் பிரிந்திருக்கின்றார். (சி)

---

### 14 வருடங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்திரமே அவரது ஒரு காலின் தொடைப்பகுதியில் இருந்தது. அதனாலேயே அவர் ஊன்று கோலின் உதவியுடன் நடமாடி வந்தார்.

1991 இல் ஆனையிறவு முற்றுகைப் சமரின்போதும் அவர் வயிற்றில் காயமடைந்து தப்பிப் பிழைத்தார்.

1987 - 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தியப் படைகள் இலங்கையில் இருந்தபோது யாழ். குடாநாட்டுக்குள் தங்கியிருந்து இந்தியப் படைகளுக்கு அவ்வப்போது தொல்லை கொடுத்த புலிகளின் முக்கிய போராளிகளுள் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

---

### தமிழ்ச்செல்வன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு-

விமானத் தாக்குதல் நடைபெறும் போது தமிழ்ச்செல்வன் ஒரு இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கவில்லை.

அவர் சாதாரண பொதுமகனைப் போல் நடமாடிக்கொண்டிருந்தபோதுதான் இச்சம்பவம் நடைபெற்றதாக அறியமுடிகிறது. இது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விடயம் அல்ல.

இலங்கை அரசின் விமானப் படை வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மக்கள் மீது குண்டுவீச்சுக்களை நடத்தி மக்களை கொலை செய்கின்ற குற்றத்தை செய்கின்றது என்பதை இந்தத் தாக்குதல் நிரூபிக்கின்றது.

இது இராணுவத் தளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் அல்ல. இத்தாக்குதல் என்னத்தைக் காட்டுகின்றது? விடுதலைப் புலிகள் நடத்திய சில இராணுவத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் நோக்கில் சிவிலியன் மக்கள் வாழும் பிரதேசங்களில் தங்களுடைய தாக்குதல்களை படையினர் நடத்துகின்றனர் என்பதையே.

இது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம் அல்ல. இது கண்டனத்துக்குரிய விடயம்.

இத் தாக்குதலையடுத்து நாங்கள் மிகவும் வேதனை அடைகிறோம். தமிழ்ச்செல்வன் விடுதலைப் புலிகள் சார்பில்- தமிழ் மக்கள் சார்பில்- பேச்சுக்களில் ஈடுபட்ட ஒரு முக்கிய தலைவர்.

அவருடைய பங்களிப்புத் தொடர்ந்து இருந்திருக்கவேண்டும்.

அரசியல் ரீதியாக பேச்சுக்களில் ஈடுபட்ட தலைவர். வெளிநாட்டு இராஜதந்திரிகளை பல சந்தர்ப்பங்களில் கிளிநொச்சியில் சந்தித்து தமிழ் தேசியப் பிரச்சினை தொடர்பாக பேச்சு நடத்திய தலைவர்.

அவர் விமானத் தாக்குதல் மூலம் கொலை செய்யப்பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயம். இதனை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இவ்வாறான போக்கை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்று இலங்கை அரசை வலியுறுத்திக்கேட்டுக்கொள்ளவிரும்புகிறோம் - என்றார். (சி)

CATWAS.COM
Computer Academy
இதோ! ஆரம்பம்
Ms Office
DTP
Hardware
Kids Program

ஐடியல் அக்கடமி
சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், காரைநகர்
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2007
ஆரம்பம்:- இன்று (03.11.2007) மாலை 2.00
தரம் 6 முதல் O/L வரை
சகல பாடங்களும்
வினாத்தாள் பெற விரும்புபவர்கள்
021-222-5410 இல் தொடர்பு கொள்ளவும்
நிர்வாகியும், கணித ஆசானும்.
V.N.பத்மநாதன்

அன்போலி கல்வியகம்
யாழ். இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
2008 இல் தரம் 4 (தற்போது தரம்3) மாணவர்களுக்கான வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
காலம்: 05.11.2007 திங்கள் பி.ப 3 மணி
அனுமதிகளை சனி, ஞாயிறு தினம்களின் முன்கூட்டியே பெற்றுக்கொள்ளுங்கள்
-இயக்குநர்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
aat (Sri Lanka)
Foundation level, Intermediate level & Final
Exam :- APRIL 2008
ஆரம்பம் :- 03-11-2007 (Saturday)
Medium :- English & Tamil
வார நாள் வகுப்புகள், வார இறுதி நாள் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
Further Details
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road (Near Commercial Bank)
Jaffna

BARGAINING
SALES OFFER
விலையை நீங்கள் கேளுங்கள்
கட்டுபடியானதை தருகிறோம்
இன்று நேற்றல்ல
இரு தசாப்தங்களாக
கணினி துறையில்
We Are Not Big But The Best
UNIT
மனோகரா சந்தி
347, K.K.S Road, Jaffna
4590720, 0779134737

NEW SCIENCE HALL
2008 A/L CHEMISTRY
By க.சிவத்திரன் B.Sc (Hons)
(மீள் பரீட்சாத்திகளுக்குரியது)
1) மாதிரி வினா விடை வகுப்பு.
கடந்த கால, வெற்றி நிச்சயம், வேறுமாவட்டம், தொண்டைமானாறு வெளிக்கள நிலையம், இன்னும் பல வினாக்கள்.
ஆரம்பம்:- 06.11.2007 Tue. 11.30 - 12.30
Tue., Thur. 11.30 - 12.30
2) பௌதிக இரசாயனம் (Theory)
ஆரம்பம்:- 09.11.2007 Fri. 11.30 - 1.00
3) சேதன இரசாயனம்(Theory)
ஆரம்பம்:- 10.11.2007 Sat. 2.15 - 3.45
4) அசேதன இரசாயனம் (Theory)
ஆரம்பம்:- 11.11.2007 Sun 2.15 - 3.45
5) கடந்த கால இறுதிப்பரீட்சை வினா விடை வகுப்பு அலகு ரீதியாகஆரம்பத்தில் இருந்து நடைபெறுகிறது.
(1979 To 2007)Mon to Fri. 10.00 - 11.30

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org